Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303.K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214. email-del-smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 14 (15.07.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 286

## அமைச்சர் மீது ஊழல் குற்றம்; நோர்வே முதலிடத் தயக்கம்!

மீன்பிடித்துறை அமைசச் மஹிந்த விஜயசேகர மீது, ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுட்டிக்காட்டியுள்ள நோர்வே மீன்பிடித்துறை முதலீட்டுக் குழுவொன்று, எதிர்வரும் 19 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கையில் மீன்பிடித் துறை மீதான முதலீடு தொடர்பான கருத்தரங்கைப் பகிஷ்கரிக்கப்போவதாக எச்சரித்துள்ளது.

மேற்படி அமைச்சரின் ஊழல் தொடர்பாக, கொழும்புத் தினசரிகள் தகவல்களை வெளியிட்டிருந்தன. இவரைப் பதவிநீக்க பிரதமர் தயங்குவதற்கு, பெரும்பான்மையற்ற நாடாளுமன்றப் பலமே காரணமெனக் கருதப்படுகிறது. எனினும், இவர் முக்கியமற்ற அமைச்சொன்றுக்கு விரைவில் இடமாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கண்காணிப்புக்குழு தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

### பேச்சு முடிவுகள் வெளியிடப்படவில்லை

(கிளிநொச்சி)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், கிளிநொச்சியில் நேற்று முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

கிண்ணியாவில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டு வரும் முகாம் தொடர்பான படைத்தரப்பு கிளப்பியுள்ள சர்ச்சை பற்றியே இச் சந்திப்பில் முக்கியமாகப் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

எனினும்- பேச்சுவார்த்தைகளின் முடிவு பற்றி செய்தியாளர்களுக்கு எந்தவிதக் கருத்துக்களையும் இரு தரப்பினரும் வெளியிடவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை, நாகர்கோயில் சூனியப்பகுதிகளில் போர் நிறுத்தத்தை மீறி புதிய படைமுகாம்கள்

## ரெலவ்சனுக்கு நேரில் காண்பித்தார் கேணல் தீபன்

(கிளிநொச்சி)

**முகமாலை, கிளாலி, நாகர்கோவில் பகுதிகளில் உள்ள யுத்த சூனியப் பிரதேசங்களில் போர் நிறுத்தத்தை மீறி இராணுவத்தினர் புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைத்திருப்பதை, கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு புலிகள் நேரில் காண்பித்தனர்**

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணான வகையில், படையினரால் அமைக்கப்பட்ட இம்முகாம்களையும், காவலரண்களையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு, புலிகளின் வட போர்முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன் நேற்றுமாலை காண்பித்தார்.

நேற்று, கிளிநொச்சிக்கு விஜயம் செய்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனை, வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், பளையிலுள்ள வட போர்முனைக் கட்டளைப் பணியகத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பேரவை உறுப்பினர்களை மிரட்டிய இராணுவ புலனாய்வாளர்

வடமராட்சி நோக்கி நேற்று மாலையளவில் சென்று கொண்டிருந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் இருவரை வழிமறித்த, இராணுவப் புலனாய்வு பிரிவினர், பொலிஸார் என்ற போர்வையில் அவர்களைத் தாக்க முயற்சித்தனர்.

கோப்பாய், இராச வீதி வழியாக வானில் சென்று கொண்டிருந்தபோது- முன்னே மதுபோதையில் சைக்கிளில் சமனிலை குழம்பிய நிலையில் பயணித்துக் கொண்டிருந்த நபரை விலத்திச் செல்ல முற்பட்ட போதே, அவர்கள் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் வழிமறிக்கப்பட்டனர்.

எந்த விதமான விபத்தும் ஏற்படாத போதும், கடும் வார்த்தைகளால் அவர்களை ஏசியதோடு, தாக்கவும் புலனாய்வுப் பிரிவினர் முயற்சித்தனர். ஆயினும், அவர்கள் விலகிக்கொள்ளவே வாகனத்தின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கேணல் சூசையை ரெலவ்சன் நாளை சந்திக்கின்றார்!

(கிளிநொச்சி)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன், நாளை- கடற்புலிகளின சிறப்புத்தளபதி கேணல் சூசையுடன் முக்கிய பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளார்.

வன்னிக்கு விஜயம் செய்திருக்கும் கண்காணிப்புக்குழுத் தலைவர், நாளை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அங்கு, கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையைச் சந்தித்துக் கடற்கண்காணிப்பு விவகாரங்கள் குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன் - முல்லைத்தீவின் பலபகுதிகளுக்கும், கடற் புலிகளின் பாசறைகளுக்கும் தளபதி கேணல் சூசையுடன் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை அவர் அவதானிக்கவுள்ளார்.

அதேவேளை- இன்றுகாலை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமுல் செய்துவரும் செயற்திட்டங்களை ரெலவ்சன் நேரில்சென்று பார்வையிடவுள்ளார்.

(க,லி,ச,ரா)

## இடைக்கால நிர்வாக விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன

### அமைச்சர் மொறகொட கூறுகிறார்



தமிழ், முஸ்லிம் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களைச் சந்தித்த அமைச்சர் மிலிந்த மொறகொட, மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அவசியமாகக் கருதப்படும், வட-கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு பற்றிய திட்டம் தயாராகிவிட்டதென்றும், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கு அனுப்பப்படும் இத்திட்டம் பற்றிய எல்லா விபரங்களும் உயர் ரகசியத் திட்டமாகக் கருதி, மறைவாக வைக்கப்பட்டுள்ளதென்றும் கூறியுள்ளார்.

இதுகுறித்த விடுதலைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

### 'சோஷின்' கப்பலில் வீரச்சாவடைந்த

## மாவீரர்களுக்கு இன்று கோட்ட ரீதியில் அஞ்சலி

'சோஷின்' கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த 12 போராளிகளுக்குமான கோட்டமட்ட நினைவு நிகழ்வுகள் இன்று நடைபெறுகின்றன.

தீவகக்கோட்டத்தில்- ஐயனார் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 5 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் வல்வெட்டித்துறை நெடியகாட்டில் இருந்து, மாவீரர்களின் உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு- வல்வெட்டித்துறை அம்மன் கோயிலடியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

யாழ் - நல்லூர் கோட்டத்திற்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நடுகல் திரைநீக்கம்

கடந்த மாதம் 14 ஆம் திகதி சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த மேஜர் வள்ளுவனின் (க.விஜ‌தரன் - சங்கானை) திருவுருவப்படம் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். தொடர்ந்து, கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நடுகல் திரைநீக்கம் செய்யப்படும்.

## மட்டக்களப்பில் ஆறு போராளிகள் நேற்றிரவு பொலிஸாரினால் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், நேற்றிரவு விடுதலைப் புலிகள் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை வழிமறித்த படையினரும், பொலிஸாரும் அதிலிருந்த ஆறு போராளிகளையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடிப் பாலத்துக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை, பொலிஸாரும், படையினரும் நேற்றிரவு 10 மணியளவில் வழிமறித்துச் சோதனையிட்டனர். இந்த வாகனத்தில் பயணம் செய்த 6 புலிகள் இயக்க உறுப்பினர்களையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்களிடம் தனிப்பட்ட பாதுகாப்புக்கான ஆயுதங்கள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனத்தைப் படையினரும் பொலிஸாரும் தடுத்து வைத்திருந்ததும் அப்பகுதிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உடனடியாகச் சென்று நிலைமையை அவதானித்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2003

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில், தற்காலிக கச்சான் கடைகள், மணிகாப்புக் கடைகள், ஐஸ்கிறீம் கடைகள்/வாகன நிலையங்கள், இனிப்புக் கடைகள், இதர கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர முகவர் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள், எதிர்வரும் 23.07.2003 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப்படிவங்களை, மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூ.300/= உம் மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக - ஐஸ்கிறீம் கடைகளுக்கு ரூ.10,000/= உம் ஏனைய கடைகளுக்கு ரூபா 1000/= உம் சபையில் செலுத்துவதன் பேரில், எதிர்வரும் 22.07.2003 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிவரையும் மாநகர சபையின் நானாவித இறைவரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகளை, அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு, இடதுபக்க மேல் மூலையில், வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு, எதிர்வரும் 23.07.2003 ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன், அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும், எதிர்வரும் 23.07.2003 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2.30 மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம்.

மேலதிக விவரங்களை, மாநகர சபையின் நானாவித இறைவரிக் கிளையில் அறிந்துகொள்வதுடன், கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

*குறிப்பு:* மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர, எதிர்வரும் 02.08.2003 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து, சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் - திருவிழாக் காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.07.14

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-1237)


# சமாதான நீதிவான்களாக பதவியேற்பு



கவிஞரும், எழுத்தாளருமான அரியாலையூர் சி.சிவதாசன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி பி.சுப்பிரமணியம் முன்னிலையில், சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், அரியாலை சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய செயலாளருமாவார்.

❖ ❖ ❖ ❖



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வினாயகமூர்த்தி ஸ்ரீசக்திவேல், கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதித் தலைவராகவும், அறவழி ஸ்தாபன இயக்குநருமாகக் கடமையாற்றுகின்றார்.

❖ ❖ ❖ ❖



அனுராதபுரத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரன் குருக்கள், அனுராதபுர மாவட்ட நீதிபதி எம்.எம்.ஆர். அனுகுமார முன்னிலையில், சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். குரும்பசிட்டி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இவர், அனுராதபுரம் விவேகானந்த சபையின் தலைவராகவும், சர்வமதச் சமாதானச் சபையின் அனுராதபுரம் கிளையின் இணைத் தலைவராகவும் இருக்கிறார்.

மிக நீண்ட காலத்தின் பின் அனுராதபுரத்தில் ஒரு தமிழர் இந்நியமனம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

# ஆரியகுளம் நாகவிகாரையில் எசல பௌர்ணமி உற்சவம்!

## படையதிகாரிகளும் பங்கேற்பு

யாழ்ப்பாணம் - ஆரியகுளத்தில் அமைந்துள்ள நாகவிகாரையில், எசல பௌர்ணமியை முன்னிட்டு அலங்காரபவனி, நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் பௌத்த பிக்குகள், சிங்கள மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில், அலங்கரிக்கப்பட்ட யானையுடன் பக்தி கீதங்கள் இசைக்க, நாட்டிய நடனங்களுடன் அலங்கார பவனி ஆரியகுளம் சந்தியிலிருந்து ஆரம்பமாகியது. இந்தப் பவனி - கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி ஊடாக நாக விகாரையைச் சென்றடைந்தது.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காக - நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து நடனக் கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்களும், பெருமளவான சிங்கள மக்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இந்த நிகழ்வினையொட்டி நாக விகாரையைச் சுற்றி இராணுவத்தினரும், இராணுவப் பொலிசாரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வினை - பத்திரிகையாளர்கள படம் பிடிப்பதற்கு, இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரவேங்கை தமிழூரான் வித்துடல் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டத்தில் கடந்த 11 ஆம் திகதி, தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த, வீரவேங்கை தமிழூரான் (இரத்தினம் சிவசங்கர், டொக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்) என்ற மாவீரரின் வித்துடல், நேற்று முன்தினம் அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தினை அடுத்து - கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைககப்பட்டது.


மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

# யாழ். நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்.

*காலம்* : 2003 ஜூலை 15 முதல் 30 வரை.
*நேரம்* : தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்).
*இடம்* : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபம்.

- ❑ பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாட, பயிற்சிப் புத்தகங்கள்.
- ❑ பல்கலைக்கழக மாணவர்களுக்கான மருத்துவ, விஞ்ஞான, கணித, பொறியியல், கலை, விஞ்ஞான, வணிக நூல்கள்.
- ❑ கணினிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்.
- ❑ சிறுவர் இலக்கியங்கள்.
- ❑ நாவல்கள், சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள்.
- ❑ அகராதிகள் (தமிழ், ஆங்கில மொழிகளில்).
- ❑ ஜோதிட நூல்கள்.
- ❑ சமையற்கலை நூல்கள்.
- ❑ ஆங்கில இலக்கிய நூல்கள்.
- ❑ தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்).
- ❑ தரமான C.R. புத்தகங்கள் (மலிவு விலையில்).

**விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே நாளில் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!**

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய, விலை விபரம்:

| | | |
|---|---|---|
| இலங்கை நூல்களுக்கு | - | ஆகக்கூடிய சில்லறை விலையில் 10 % கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு | - | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு | - | 1UK £ - 165/= வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு | - | 1US $ - 110/= வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு | - | 1S $ - 75/= வீதப்படி |

*முக்கிய குறிப்பு:*
பாடசாலைகள், பல்கலைக்கழகம், பொது நிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில், 10% கழிவு கொடுக்கப்படும். புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விசேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதிய ஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.
யாழ்.எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்க விரும்பினால்
13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

வாருங்கள்! அலைகடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!
விரும்பியதை வாங்குங்கள்! அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1169)

வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்
JEYA BOOK CENTRE, 91-99, People's Park Complex, Colombo - 11

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!



நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், மீரா ஜஸ்மின் நடித்த

புதிய கீதை



காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE LORD OF THE RINGS

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்

ப்ரியமான தோழி



10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1137)

# படையினரின் சுற்றிவளைப்புக்கள் அடுத்த கட்டத்தையே தூண்டும்!

## மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

மட்டக்களப்பு மாவட்டத்தில்- பொதுமக்கள் வாழும் பகுதிகளில், படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது, தாம் அடுத்தகட்ட நடவடிக்கையைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுமென விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

வானொலியொன்றுக்கு வழ்ங்கிய செவ்வியிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

எந்தவொரு காரணமுமின்றி மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பொது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் - சுற்றிவளைப்பு, சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சோதனை மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும். அத்துடன், தற்போதுள்ள நிலைமை மாறி - அதற்கெதிரான சூழ்நிலையை உருவாக்கலாம்.

படையினரின் இந்த நடவடிக்கைகள் குறித்து, உயர்படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளோம். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடமும் தொடர்புகொண்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்கள் குடியிருப்பில் தேடுதல்; உடன்பாட்டுக்கு முரணானது!

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இராணுவத்தினர் தேடுதல்களை நடத்துவது - புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணான செயல் என்று, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரிலுள்ள மனையாவெளி, புதுத்தோட்டம் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் காலை பெருமெடுப்பிலான தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாகத் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின், திருமலை மாவட்ட தற்காலிகப் பிரதிநிதி ஹட் ஸ்பேரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

# மனித உரிமை ஆணைக்குழு இளம்பரிதியுடன் சந்திப்பு !

யாழ். வந்த மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை உயர் அதிகாரிகள், காணாமற்போனோர் தொடர்பாக -

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.குடாநாட்டில் காணாமற் போனவர்களைப் பற்றிய விபரங்களை பெறும் பொருட்டும், இதுபற்றிய பூரணமான தகவல்களைப் பெறுவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன், காணாமற்போனோர் தொடர்பான பட்டியல், இருதரப்பினரிடமும் கையளிக்கப்பட்டது. இச்சந்திப்பில் விசாரணைக்குழு அதிகாரிகளான - தேவநேசன் நேசையா, கமிலஸ் பெர்னாண்டோ, மனித உரிமை ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால், யாழ். மாவட்ட அரசியற்துறையைச் சேர்ந்த இமையவன் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். குடாநாட்டு - உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த தென்னாபிரிக்க நிபுணர் கருத்துக்கு இந்தியா - இலங்கையிடம் ஆட்சேபம்!

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக, அண்மையில் பண்டத்தரிப்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய தென்னாபிரிக்க பாதுகாப்பு நிபுணர் - உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி, இந்தியாவின் இராணுவ நிபுணர் சதீஷ் நம்பியார் கொடுத்திருந்த அறிக்கையை விமர்சித்திருந்தமை - இந்தியத் தரப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக, 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' என்ற இந்திய நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் - ஜேர்மனியின் தன்னார்வத் தொணடு நிறுவனமான - பேகவ் பவுண்டேஷன் அமைப்பு, யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியிருந்தது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய, தென்னாபிரிக்க இராணுவ நிபுணர் - நம்பியாரின் உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய அறிக்கையில், குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பொருத்தமற்றவை என விமர்சித்திருந்தார்.

அத்துடன், உயர்பாதுகாப்பு வலயம் - முழுமையாக மனிதாபிமான நோக்குடன் கருத்திலெடுக்கப்பட வேண்டுமெனவும், இந்த விவகாரம் பற்றி விடுதலைப் புலிகளுடனும், தமிழ்மக்களுடனும் அரசாங்கத் தரப்பு பேசி, ஒரு இணக்கப்பாட்டைக் காண வேண்டுமெனவும் அவர் கேட்டிருநதார்.

இவ்வாறு இந்த இராணுவ நிபுணர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களே, இந்தியத் தரப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக, 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளர் பி.கே.பாலச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை மேலும் செய்தி வெளியிடுகையில் - பண்டத்தரிப்பில் நடைபெற்ற உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய, தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டொக்டர் றொக்கி வில்லியம்ஸ் - விடுதலைப் புலிகளுக்கு நீணடகாலமாக ஆதரவளித்து வருபவர் என்றும்,

டொக்டர் றொக்கி வில்லியம்ஸ் தனது பேச்சில் - உயர் பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்துவதற்கு, நம்பியார் விதித்த முக்கியமான நிபந்தனையான - விடுதலைப் புலிகள் தமது கனரக ஆயுதங்களைக் கையளிக்கவேண்டுமென்ற யோசனை, எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது எனத் தெரிவித்த கருத்து, இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருப்பதாகவும், 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை மேலும் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த மாநாடு தொடர்பாகவும், அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும், தனது அதிருப்தியை உத்தியோகப்பற்றற்ற ரீதியில் இலங்கைக்கு இந்தியா தெரியப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்ட, 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை -

ஒரு ஜேர்மனிய தன்னார்வத் தொண்டு நிறுவனம் - எவ்வாறு இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி ஆராயமுடியுமென, இலங்கை அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியிருப்பதாகவும், குறிப்பிட்டுள்ளது.

# 30 மி.மீ. பீரங்கிகள் நாற்பதை கடற்படை இஸ்ரேலிடம் வாங்கும்!

(கொழும்பு)

கடற்படைக்குத் தேவையான 30 எம்.எம்.நீண்டதூர பீரங்கிகளை, இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.

கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளின் ஆயுத பலத்தை மேலும் அதிகரிக்கும் நோக்குடன், 30 மி.மீ. ரகத்தைச் சேர்ந்த நாற்பது பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருக்கும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் - ஆயுதக் கொள்வனவு தொடர்பாக இஸ்ரேலிய அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

இதேவகையான பீரங்கிகள் அமெரிக்காவிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அமெரிக்கத் தயாரிப்பு பீரங்கிகள் விலை குறைவாக இருந்த போதிலும், இலங்கை அரசு, இஸ்ரேலியத் தயாரிப்பு பீரங்கிகளைக் கொள்வனவு செய்யவே தீர்மானித்து - அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளில், 23 மி.மீ.ரகத்தைச் சேர்ந்த பீரங்கிகளே தற்போது பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் தாக்குதல்திறன் குறைவாக இருப்பதாலேயே, 30 மி.மீ. நீண்டதூரப் பீரங்கிகளை கொள்வனவு செய்ய கடற்படை தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. (01)

## லெப்.சீலன், ஆனந்த் நினைவுநாள்!

(யாழ்ப்பாணம்)

லெப்ரினனட் சீலன், வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின் இருபதாவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வும், அஞ்சலிக் கூட்டமும் இன்று மாலை 5 மணிக்கு, மீசாலையிலுள்ள லெப்ரினன்ட் சீலன் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் டீ.என்.சற்குணநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# அதிகாரிகள் பதவியுயர்வு விவகாரம்; கடற்படைக்குள் பெரும் முரண்பாடு!



தயா சந்தகிரி

கடற்படையின் உயர்மட்டத்தில் மீண்டும் முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் - இரண்டு கடற்படை உயரதிகாரிகள் தமக்குப் பதவியுயர்வு வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக, கடற்படைத் தளபதி மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளதால், கடற்படையின் பதவி உயர்வுச் சபைக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருபபதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடற்படையின் பொறியியல் பிரிவு பணிப்பாளர் கொமடோர் டி.சி.ஐ.காரியவசம், கடற்படையின் வளங்கள் செயலகப் பணிப்பாளர் கொமடோர் ஜே.எச்.ஏ.அபயகோன் பண்டா ஆகியோர் - தமக்குரிய பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல்- தயா சந்தகிரிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

நீதிமன்றத்தில் கடற்படைத்தளபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்த அதிகாரிகளுக்குப் பதவியுயர்வு வழங்குவதா, இல்லையா என்பது குறித்துக் கடற்படையின் பதவியுயர்வுச் சபைக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆனாலும், கொமடோர் பதவியில் மூன்றாண்டு காலத்தை முடித்து, செப்ரெம்பரில் இந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற வேண்டிய நிலையில் இருக்கும், மேற்படி இரண்டு அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்குவது குறித்து உடனடியாகத் தீர்மானிக்க வேண்டிய நிலையுள்ளது.

கடற்படையின் பதவியுயர்வுச் சபையில் பிரதம த்லைமை அதிகாரி - றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, றியர் அட்மிரல் வசந்த கரணகொட, றியர் அட்மிரல் எச்.எஸ். ரட்ணகீர்த்தி, கப்டன் பிறேமதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களில் - றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவும், றியர் அட்மிரல் ரட்ணகீர்த்தியும் பதவி உயர்வு வழங்குமாறு, நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்த இரண்டு கடற்படை அதிகாரிகளுக்கும், பதவி உயர்வுகளை வழங்குவதற்குச் சிபார்சு செய்துள்ளனர்.

ஆனால், கிழக்குக் கடற்படைத் தளபதியும், கடற்படையின் மூன்றாவது நிலையிலுள்ள அதிகாரியுமான றியர் அட்மிரல் வசந்த கரணகொடவும், கப்டன் பிறேமதிலகவும் பதவியுயர்வு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த இழுபறியால், பதவி உயர்வுச்சபை இரண்டாகப்பிளவுபட்டிருக்கிறது.

இருதரப்பும் தமது சிபார்சுகளைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அத்துடன், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கும் இது குறித்துத் தகவல் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனாலும், கடற்படைத்தளபதி தயா சந்தகிரியின் இறுதி முடிவின் அடிப்படையிலேயே - இரண்டு கடற்படை அதிகாரிகளுக்குமான பதவி உயர்வு தீர்மானிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. எனினும், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் இந்த விடயத்தில் தலையிடுவதற்குச் சாத்தியங்களும் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை, கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்த இரண்டு அதிகாரிகளுக்கும், பதவியுயர்வு வழங்கினால் - முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகளுக்கு அது ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று; குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு பதவியுயர்வு வழங்கக்கூடாதென எதிர்க்கும் பிரிவினர் கூறுகின்றனர்.

இதேவேளை, கடற்படையின் முதல் மூன்று இடங்களிலும் இருக்கும் அதிகாரிகளுக்கிடையிலான முரண்பாடுகளும், இப்போது முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கரணகொட, பிரதம தலைமை அதிகாரி றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம ஆகியோருக்கிடையிலேயே இந்த முறுகல் ஏற்பட்டிருக்கிறது. இந்த முரண்பாடுகளுக்கு, கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கு மூன்று வருடகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டதே காரணமாகும். இந்தச் சேவை நீடிப்பால், றியர் அட்மிரல் தரத்திலுள்ள ஆறு சிரேஷ்ட கடறபடையதிகாரிகள் அடுத்த பதவிக்கு நகரமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

## சிலாபம் தேடுதலில் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

சிலாபம் பகுதி கடந்த சனிக்கிழமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுவளைப்புத் தேடுதலில் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது.

துப்பாக்கிகளை வைத்திருந்த அரசியல்வாதி - தலைமறைவாகியுள்ளார் என்று, சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

ரி - 56 ரகத் துப்பாக்கி ரவைகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையினபோது, 24 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## தெற்காசியாவில் கணினி அறிவு இங்கேயே மிகக் குறைவு!

தெற்காசியாவிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் கணினி அறிவு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதாக, விஞ்ஞான தொழில்நுட்ப பிரதியமைச்சர் கேலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கணினி அறிவைக் கொண்ட மக்கள் 1.5 சதவீதமாக இருக்கின்றனர்.

ஏனைய தெற்காசிய நாடுகளில், 17 சதவீதமானவர்களுக்குக் கணினி அறிவுள்ளது.

இலங்கையர் மத்தியில் - உயர் படிப்பறிவு இருந்து வருகின்றபோதிலும், அவர்கள் கணினி அறிவில் குறைவாக இருக்கின்றனர். இதனால், மக்கள் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான, புதிய முன்னேற்றங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் எனவும், அமைச்சர் கேலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# உயரிய இலக்கியங்களைப் படைக்க உண்மையான மனிதர் வேண்டும்!

## 'செவ்வரளிப் பூக்கள்' வெளியீட்டு விழாவில் புதுவை



உண்மையான மனிதர்கள் உயரிய இலக்கியங்களைப் படைக்கின்ற நிலை, எமது நாட்டுக்குத் தற்போது தேவையாக உள்ளதென, கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் - புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

ந.கிருஷ்ணசிங்கத்தின் 'செவ்வரளிப் பூக்கள்' சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில், வெளியீட்டுரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

உயரிய மனிதர்கள், உயரிய இலட்சியங்களைப் படைக்கின்ற நிலைக்கு எங்களை தயார்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் இந்த நூலை விமர்சிக்கவேண்டும். இலக்கிய ரீதியில் விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டும். ஆனால், ஒரு விடுதலையை நேசிக்கின்ற ஒரு மனிதனுடைய அற்புதமான படைப்பினை, வெறும் இலக்கிய ரீதியாக அணுகமுடியுமா என்பதை நாம் மனதிற் கொள்ளவும் வேண்டும்.

ஈழத்தின் உயரிய இலக்கிய கர்த்தாக்கள் என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் சிலரை, எடுத்துப் பார்ததால், அவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பதென்று தெரியவில்லை.

உண்மையான, உயரிய இலக்கியம் - வெறும் பேச்சளவில் தோன்றுவதில்லை. அது, மானுட விடுதலையுடன்தான் உருவாகும் என்றார்.

## விபத்தில் குடும்பஸ்தர் காயம்

உரும்பிராய்ப் பகுதியில், லொறியும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு - உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், மாணிக்கம் காங்கேஸ்வரன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவராவார். (121)

## காணாமற்போனோரின் குடும்பங்கள் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்ளன!

### மனிதஉரிமை ஆணைக்குழுவினர் கவலை

குடாநாட்டில் காணாமற்போனோரின் உறவினர்கள், உளவியல் ரீதியாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக, காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட, மனிதஉரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கணவன் மற்றும் பிள்ளைகள் காணாமற்போன குடும்பங்கள் - வேலையின்மை, பணப்பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளால், உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ளன.

இவ்வாறு, பாதிப்புற்ற குடும்பங்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு, அரச்சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

அத்துடன், உளவியல் ரீதியாகப் பாதிககப்பட்டவர்களுக்கு, உளநல ஆலோசனைகள் வழங்குவதன் மூலமே, அவ் வாறானவர்களைச் சாதாரண நிலைக்குக் கொண்டுவர முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை, வேறு நிறுவனங்கள்மூலம் மனித உரிமை ஆணைக்குழு செய்யவுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வணிக மாணவர் மன்ற ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம் - மாபெரும் புத்தகக கண்காட்சியையும், மலிவு விலையில் புத்தக விற்பனையையும் நடத்துவதற்கான ஏற்பாடுக்ளைச் செய்துள்ளது.

பல்துறை சார்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு நூல்கள் மற்றும் அண்மைக்கால வெளியீட்டு நூல்கள் ம்ற்றும் நாவல்கள், இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் சொத்துக்களில் முக்கியமானதான அரிய புத்தகங்கள் - இராணுவ நடவடிக்கைகளாலும், இடம்பெயர்வுகளாலும் அழிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்ட நிலையில், நூல்களை வாங்கிச் சேகரிக்க வாய்ப்பு வழங்கும் பொருட்டே, இந்தப் புத்தகக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# 28 போராளிகளை இழந்தும் இன்னமும் பொறுத்துள்ளோம்!

## சஞ்சீவன் நினைவுக்கூட்டத்தில் கவியன்பன்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - 28 போராளிகளை நாம் இழந்தும், நிரந்தர சமாதானத்திற்காகவே பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றோம் என, யாழ்.மாவட்ட தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்தார்.

இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட, யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவனின் முதலாம் ஆண்டு நினைவாக இடம்பெற்ற, நினைவஞ்சலிக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இம்மாணவனின் இழப்பு, வெளியுலகத்துக்குச் செய்தியாக இருக்கலாம். ஆனால், எமக்கு இது ஓர் பேரிழப்பாகும். இந்த மண்ணில் சிந்தப்படும் ஒவ்வொரு துளி வியர்வ்வை மற்றும் இரத்தத்தின் மூலமே, நாம் நிம்மதியாக வாழக்கூடிய வாழ்க்கையினை அமைத்துக் கொள்கின்றோம்.

எமது தேசத்தைப் பொறுத்தவரையில் - ஓர் கல்வியாளனை, தேசப்பற்றோடு வாழ்ந்துகொண்டிருந்த ஓர் மாணவனை சிங்கள இராணுவத்தினரின் அராஜகத்தால் இழந்துள்ளோம்.

இந்த இழப்பிற்குக்கூட இராணுவம் பயங்கரவாத முத்திரை குத்தியுள்ளது. தேசத்தை நேசித்தவன் பயங்கரவாதியா? நாம் எந்த இலட்சியத்தோடு இப்போராட்டத்தை ஆரம்பித்தோமோ, அந்த இலட்சியம் நிறைவேறும் காலம் வெகுதூரத்திலில்லை.

எமது மொழி, வாழ்வுரிமைக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமே - இன்று பெரிய விருட்சமாக வளர்ந்து, சர்வதேசம் வியக்கும் பாரிய படையணியாக வளர்ந்து நிற்கின்றது. சஞ்சீவனின் உயிரும், பெரும் விருட்சமாகி, உலகெங்கும் உயர்ந்து நோக்குகின்ற உன்னத நிலையை அடைந்துள்ளது. மக்களுக்கு ஓர் நிரந்தர சமாதானச் சூழலை ஏற்படுத்தவே, நாம் எந்தவொரு முடிவுக்கும் இசைந்து செல்கின்றோம் என, அவர் தெரிவித்தார்.

# விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பவர்கள் அதில் பங்குகொள்ளவும் முன்வரவேண்டும்!

## அரச அதிபர் பத்மநாதன் உரை

பதினைந்து வருடங்களின் பின்னர் - யாழ்ப்பாணத்தில் பெரியதொரு விளையாட்டு விழா நடைபெறுகின்றது. தற்போது நாட்டில் நிலவும் சமாதானச் சூழ்நிலைகளினால் அனைவரும் இங்கு வரக்கூடியதாகவுள்ளது. இவ்வருடம், தேசிய விளையாட்டு விழா மற்றும் வடக்கு-தெற்கு சமாதான விளையாட்டு விழா என்பன யாழ். மாவட்டத்திலேயே இடம்பெறவுள்ளன. இதனால், யாழ்ப்பாண மக்கள் பல விள்ளையாட்டுப் போட்டிகளை நேரில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தினைப் பெறவுள்ளனர் - என,

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட தடகள விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வில், கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

தேசிய விளையாட்டு விழாவினை, யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக, யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானம் பாரியளவில் புனரமைப்புச் செய்யப்படுகிறது.

இன்று வடக்கு - கிழக்கினைச் சேர்ந்த அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளும் ஒன்றாகக் கூடியிருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது.

இந்த விளையாட்டு விழாக்களைப் பார்ப்பவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவும் முன் வரவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# சஞ்சீவனின் நினைவாக மாணவர் பேரவையில் கூட்டம்!

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட, யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் முன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம், நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழ மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, சஞ்சீவனின் திருவுருவப் படத்திற்கு அவரது தாயார் நினைவுச் சுடரேற்ற, அவரது தந்தை மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். அடுத்து, யாழ். இந்துக கல்லூரியின் ஆசிரியர் இளங்கோ மற்றும் மாணவர் பிரதிநிதி ஒருவரும் உரையாற்றினர். சிறப்புரையினை, யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் நிகழ்த்தினார். (ரா)



படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவன் சஞ்சீவனின் உருவப் படத்துக்கு அவரது தாயார் நினைவுச்சுடரேற்றுவதைப் படத்தில் காணலாம்.

*படம் - ராஜ்குமார்*


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் : ந.கார்த்திகன்
சூரிச்,
சுவிற்சர்லாந்து.

ஏழாவது அகவையில்

பெயர் :சி.சுபேதா
நீர்ரா வீதி,
நீர்கொழும்பு.



பத்தாவது அகவையில்



பெயர் :கீ.அச்சுதன்
டச்சு வீதி,
சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

# திரை விமர்சனம்

## ப்ரியமான தோழி

திரைக்கதை - மாதவன் மற்றும் ஸ்ரீதேவி ஆகியோரின் பிள்ளைப் பராயத்திலிருந்து ஊர்ந்து, நகர்ந்து இருவரினதும் குணவியல்புகளை, அவர்களது குடும்பப் பின்னணியில் வைத்து விபரித்து, சூடுபிடிக்க ஆரம்பிக்கிறது. மாதவனும், ஸ்ரீதேவியும் சிறுபராய நண்பர்கள். வளர்ந்தாலும் காதலைவிட நட்பே உயர்வானது என்று நிற்கிறார்கள். மற்றையவர்கள் இவர்களின் நட்பை வித்தியாசமாகவே நோக்குகின்றனர். ஆனால், இருவரிடையேயும் காதல் என்ற எண்ணமே ஏற்படவில்லை. ஸ்ரீதேவியின் தந்தை மணிவண்ணன் இறந்தபோது, ஸ்ரீதேவியை மாதவன் தனது வீட்டுக்குக் கூட்டி வந்துவிடுகிறார். பணக்காரப் பெண்ணான ஜோதிகாவுடன் காதல்கொள்ளும் மாதவன் அவரை மணம்முடிக்கிறார். ஸ்ரீதேவ், மாதவனுடான நெருக்கம் ஆரம்பத்தில் ஜோதிகாவுக்கு நெருடலாக இருப்பினும், பின்னர் புரிந்துகொள்கிறார்.



மாதவனின் கிரிக்கெட் எதிரியும் சக கிரிக்கெட் வீரரும், கல்லூரி அதிபர் ஒருவரின் மகனுமான வினீத்தை ஸ்ரீதேவி காதலிக்கிறார். அவர்களின் திருமணத்துக்கு வினீத்தின் தந்தை நிபந்தனை விதிப்பதும், அதற்காக மாதவன் இணங்குவதும், இறுதியில் அனைத்தும் சுபமாக முடிவதற்கு முன்பாகவரும் திருப்புமுனைக் காட்சிகளாகின்றன.

'அன்பே சிவம்' திரைப் படத்தில் முத்திரை குத்திய மாதவன், 'ப்ரியமான தோழி'யிலும் ஆற்றலை வெளிக்காட்டி, வளர்ந்துவரும் நடிகர் என உறுதிசெய்துள்ளார். இயல்பான நடிப்பின்மூலம் பார்வையாளர்களின் அனுதாபத்தையும் பெறுகிறார். இடைவேளைக்குச் சற்றுமுன்பாகவே ஜோதிகா தோன்றுகிறார். எனினும், அவரின் நடிப்பும் சோடைபோகவில்லை. உடையில் கவனம் அதிகமாகவுள்ளது. ஸ்ரீதேவி பாத்திர தேவை கருதிச் சேர்க்கப்பட்டிருக்கிறார் அவ்வளவே.

இயக்குநர் விக்ரமன் காதல் கலக்காத நட்பை மிக நேர்த்தியாகப் பின்னியுள்ளார். அளவான வசனங்கள், இசையமைப்பில் எஸ்.ஏ. ராஜ்குமாரின் கைவண்ணம் மிளிர்கிறது. மாதவனின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக இந்தியக் கிரிக்கெட் முன்னாள் வீரர் ஸ்ரீகாந்தும் வருகிறார். ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த குடும்பப்பாங்கான திரைப்படம் - 'ப்ரியமான தோழி'.

# மக்கள் சிகரம்

பல்சுவை அரங்கு

## ரஷ்ய பொலிஸ் மோப்பப் பூனை காரினால் நசுக்கிக் கொலை

ரஷ்யாவின் பெறுமதிமிக்க ஸ்ரர்ஜிஜோன் இன மீன்களைக் கடத்தல் காரர்கள் கடத்துவதைத் தடுத்துவந்த, ரஷ்யப் பொலிஸாரின் மோப்ப சக்தி கொண்ட பூனை படுகொலை செய்யப்பட்டுள்ளது.



சட்டவிரோத மீன்பிடி

'ரூசிக்' என்ற பெயருடைய இந்தப் பொலிஸ் பூனை - கஸ்பியன் கடலுக்கு அருகேயுள்ள நகரான ஸரவரப்போலிலுள்ள சோதனைச் சாவடியில் ஸ்ரர்ஜிஜோன் மீன்களைக் கடத்துவதைத் தடுக்க, வாகனங்களை முகர்ந்துபார்த்து, கடத்தல்காரரைப் பிடித்துக்கொடுத்து வந்தது.

இந்தப் பூனை கடந்தவாரம் கார் ஒன்றினால், நசுக்கிக் கொல்லப்பட்டுள்ளது. இந்தக் கார் சில வருடங்களுக்கு முன்னர், ஸ்ரர்ஜிஜோன் மீனினங்களைக் கடத்தும் தொழிலில் ஈடுபட்டுவந்து, பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அநாதைக் குட்டியாக இந்தச் சோதனைச் சாவடிக்கு, சில ஆண்டுகளுக்கு முன்வந்த இந்தப் பூனையை, இந்தச் சோதனைச் சாவடியில் வைத்து, பொலிஸார் வளர்த்துள்ளனர். காலப்போக்கில் தனது திறமையால் அங்கிருந்த மோப்பநாயைவிட, திறமையாக மோப்பம் பிடிக்க ஆரம்பித்ததால், அதற்கு 'பதவியிலும்' உயர்வுகிட்டி அந்தச் சோதனைச் சாவடியிலேயே ரஷ்யப் பொலிஸாரின் ஒரேயொரு மோப்பப் பூனையாகப் பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

பரமநாத்திகரான அப்பாவுக்கு எதிராகக் கடவுள் நம்பிக்கையுள்ள பரம ஆத்திகராக மாறியவர் வெர்னர் ஹெர்ஸாக். "அனுபவங்கள்தான் ஒரு கலைஞனின் பள்ளிக்கூடம்" என்கிற கருத்துடையவர். தன்னுடைய சொந்த



வெர்னர் ஹெர்ஸாக்

வாழ்க்கையும், திரையுலக வாழ்க்கையும் ஒன்றுதான் என்று கருதும் ஹெர்ஸாக் கூறுகிறார், "நான் எதுவாக இருக்கிறேனோ அதுதான் என்னுடைய படங்கள்."

ஹெர்ஸாக்கின் முதல் படம் லாஸ்ற் வேர்ட்ஸ் (LAST WORDS) ஸ்பின்லாங்க் எனப்படுகிற குஷ்டநோய்க்காரர்களின் கிராமத்தில்-மிச்சமிருந்த ஒரேயொரு மனிதனைப் பற்றிய கதை. ஹெர்ஸாக்கின்'. முதல் முழுநீளத் திரைப்படம் 1967 ஆம் ஆண்டில் வெளிவந்த - சைன்ஸ் ஒவ் லைவ் (SIGNS OF LIFE), மத்திய தரைக்கடற்பகுதியைக் களமாகக் கொண்ட படம். இவரது ஈவன் டார்.'.ப்ஸ் ஸ்டார்ட்டட் ஸ்மோல் (EVEN DWARFS STARTED SMALL) படத்தில் இடம்பெற்ற கதாபாத்திரங்கள் எல்லாருமே திருடர்கள்தான். குற்றவாளிகளைச் சீர்திருத்த உருவாக்கப்பட்ட விடுதிதான் இந்தக் கதையின் மையக்களம்.

1970 ஆம் ஆண்டில் வெளியான '.'.பாத்தாமொர்கானா' படத்தில் சஹாரா பாலைவனம்தான் முக்கிய இடம்பெறுகிறது.

லான்ட் ஒவ் சைலன்ஸ் அன்ட் டார்க்னஸ் (LAND OF SILENCE AND DARKNESS) படத்தில் - குருடர்களும், செவிடர்களும் தங்களது சிறப்பான பயிற்சிகள்மூலம், எவ்வாறு இயல்பான வாழக்கைப் பாதையில் இடம்பெற்று வாழ்கின்றனர் என்பதை விளக்குகிறார்.

1972 ஆம் ஆண்டில் வெளியான அகிரே, த ராத் ஒவ் கோட் (AGUIRRE, THE WRATH OF GOD) படம் 16 ஆம் நூற்றாண்டில், எல்டாரோடாவில்

**வெர்னர் ஹெர்ஸாக்**

வெற்றிபெற்ற ஸ்பானியப் படைவீரர்களின் வரலாற்றைக் கூறுகிறது. படத்தில் இடம்பெறும் காலகட்டம் கி.பி.1560. இந்தப் படந்தான் ஹெர்ஸாக்கை அகில உலகப் புகழ்பெற வைத்தது.

வாழ்க்கையின் பெரும்பாலான பகுதியை மனநோய் மருத்துவமனையிலேயே செலவழித்த ஒரு மனிதனை, அவனுடைய நடுத்தர வயதில் இந்தச் சமூகவாழ்க்கையை அறிந்துகொள்ளும்படி அறிமுகப்படுத்துகிறார் ஹெர்ஸாக். 'காஸ்பர் ஹாஸர்' என்கிற இந்த வேடம், ஒரு மாறுபட்ட கதாபாத்திரமாக விளங்குகிறது. இது - எவரிவன் .'.போர் ஹிம்செல்வ் அன்ட் கோட் எகெய்ன்ஸ்ட் ஒல் (EVERY ONE FOR HIMSELF AND GOD AGAINST ALL) என்கிற 1974 ஆம் வருட வெளியீடு தொடர்ந்து லாஸ".'.ப்ரி (LASOUFRIERE), ஹார்ட் ஒவ் கிளாஸ் (HEART OF GLASS), ஸ்ட்ரோசெக (STROSZEK) படங்களுககுப் பின்பு, நோஸ்.'. பெராத், தி வம்பயர் போன்ற இரத்தம் உறையும்படியான திகில் படங்களை வழங்கினார். இந்தப் படத்தில் வரும் முக்கிய கதாபாத்திரங்கள் - மனித இரத்தத்தையே உணவாகக் கொள்கின்றன.

"சிங்கங்களே இல்லாத உலகத்தில் வாழ்வதை நான் விரும்பவில்லை. குறைந்தபட்சம் சிங்கம் போன்ற மனிதர்களாவது இல்லாத இடத்தில் வாழ்வதில் அர்த்தமில்லை" என்பார் ஹெர்ஸாக். நவீன மனித சமூகத்தில் - மனிதன் நேர்மையாகவும், மற்றவர்களுக்குப் பயனுள்ளவனவாகவும் வாழமுடியாது என்று அவர் கருதினார். மனிதர்களுக்கு இயற்கையாகவுள்ள உணர்வுகளே அவர்களைப் பிரித்துவிட்டன என்று அவர் நம்பினார். ஹெர்ஸாக் தன்னுடைய சமகால மக்களின் வாழ்க்கையைத் தம்முடைய படங்களின் கருப்பொருளாக எடுத்துக்கொள்ளவில்லை. அவரது படங்கள் - அவற்றையெல்லாம் தாண்டிய ஒரு விடயமாக இருந்தன.

ஹெர்ஸாக்கின் படங்களில் தைரியமான பகுதிகள் அபூர்வமாகவே இடம்பெறுகின்றன. 1973 ஆம் ஆண்டு வெளியான, அகிரே, ராத் ஒவ் கோட் (AQUIRRE, WRATH OF GOD) படத்தில் புதையுண்டிருக்கும் தங்கம் தொடர்பாக 'பெரு' பள்ளத்தாக்கின் அபாயமான பகுதிகளில் ஒரு நீண்டபயணத்தை, அவரது கமரா மேற்கொள்கிறது. 1982 ஆம் ஆண்டு வெளியான, பிட்ஸ் காரல்டோ (FITZ CARRA LDO) படத்தில் இடம்பெறும் ஒரு கதாபாத்திரம் - அமேசன் காட்டின் மையப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஓர் இசை நாட்டிய அரங்கம். இது ஹெர்ஸாக்கின் பாணி. கதைப்போக்கைத் துல்லியமாக வெளிப்படுத்தும் அருமையான படப்பிடிப்புத் தளமாகிறது.

நகர்வதற்கு ஓர் அங்குலம்கூட இடமில்லாத சமயத்தில், கதாநாயகன் முன்பு ஒரு துப்பாக்கி நீட்டப்பட்டு, முன்னேறும்படி நிர்ப்பந்திக்



லாண்ட் ஒவ் சைலன்ஸ் அன் டார்க்னஸ் படத்தில்...

கப்படுகிறான். மற்றொருபுறத்தில் - ஒரு மிகப்பெரிய படகின்மூலம் பெரிய மலைத்தொடரைக் கடக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. காட்சி நகரும்போது, "கனவுகள் மலைகளை நகர்த்துகின்றன" என்கிற வசனம் கேட்கிறது. இதுபோன்ற விடயங்கள்தான் ஹெர்ஸாக்கின் டைரக்ஷன் பாணி எனலாம்.



லாஸ்ற் வேர்ட்ஸ் படத்தின் ஒரு காட்சி

ஹெர்ஸாக், சாதாரண மனிதர்களுடன் மிகக்குறைந்த அளவிலேயே ஈடுபாடுள்ளது. மற்றையபடி, அவரது பாத்திரங்கள் தங்களால் முடிந்தளவு போராட்டம் நடத்துபவர்களாகவே உள்ளனர். ஹெர்ஸாக் இரண்டு வகையான மனிதர்களை மட்டுமே மரியாதையுடன் கவனிக்கிறார்.

ஒருவர், சதா கற்பனையில் உழல்பவர். மற்றவர், எதிலும் திடமான - உறுதியில்லாத மன இயல்பு கொண்டவர். பிட்ஸ் காரல்டு போன்ற படங்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட, அவமானப்படுத்தப்பட்ட, காயம்பட்டவர்களையே முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டுள்ளன. இத்தகையவர்கள் திகிலைத் தாராளமாகவே படைக்கின்றனர்.

இந்தவகையில் நொஸ் பெராத், 1979 ஆம் ஆண்டில் வெளியான வம்பயர் போன்ற படங்களையும் குறிப்பிடலாம். இத்தகைய வேடங்கள் இரக்கத்துக்குரியன அல்ல.

இன்னும் சொல்வதானால், அவர்களே கட்டுப்படுத்த முடியாத ஒருநிலையை அடைந்து விட்டவர்கள். ஹெர்ஸாக் மிகவும் ரசித்த மனோநிலையில் பேய் பிடித்தவர்களையும், தொற்று நோய்க்கிருமிகளையும் மற்றும் இதுபோன்ற சக்திகளையும் மேல் வர்க்க மனிதர்களின்மீது ஏவுகின்றார்.

கடைசியில் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி, அவர்களது அமைதியைக் குலைக்கின்றார்.

இவையெல்லாம் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு, கலைத் தன்மையுடன் வெளிப்படுகின்றன. இந்த மாதிரியான படைப்புப் பாணி ஹெர்ஸாக்கின் தனிப் பாணியாகக் கருதப்படுகிறது.

(தொடரும்...)

# உறக்கம் ஞாபகத்தை வளர்க்கும்

உறக்கம் அவசியம் என்ற எமது பாரம்பரிய நம்பிக்கையை விஞ்ஞானிகள் மீண்டும் நிரூபித்துள்ளனர். உறங்கினால்தான் எமது மூளை புதுவிடயங்களை உள்ளெடுக்கும் என்பதை, புது ஆய்வுகள் நிரூபித்துள்ளன.



நீண்டநேரம் உறங்கச் செய்யப்பட்ட எலிகள் - தமக்கிடப்பட்ட பணிகளை விரைவாகவும், செம்மையாகவும் செய்தமையை விஞ்ஞானிகள் அவதானித்துள்ளனர். ஒருவர் கற்ற பின்னர், அடுத்த ஐந்து மணிநேரத்தில் அவரின் மூளை- அந்த விடயங்களைத் தரம் பிரித்து, சேமித்து வைப்பதில் மும்முரமாக ஈடுபடுகின்றது. இந்த ஐந்து மணிநேரத்தில் நாம் நன்கு உறங்கினால், சேமிப்புத் தரமாக நீண்டகாலத்துக்கு இருக்கும் என, பென்சில்வேனிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் - எலிகளில் செய்த ஆய்வுகள் மூலம் உறுதிசெய்துள்ளனர்.

மூளையிலுள்ள ஹிப்போகம்பஸ் என்ற பகுதி, தகவல்களை ஞாபகத்துக்குக் கொண்டுவருவதில் உதவிசெய்கிறது. உறக்கம் போதுமானதாக இருந்தால்தான், இதன் செயற்பாடு துல்லியமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# சடலங்கள் மூலம் தொற்று: ஒரு கிராமமே அழிந்தது!



இந்த வருட ஆரம்பத்தில் - மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில், பரவிய எபோலா வைரஸ் நோயினால் கிராமம் ஒன்றில் அனைவருமே பலியாகியுள்ளனர். எல்லைக் கிராமமான இதில் வசித்த 123 மக்களும் பலியாகினர். இந்தக் கிராமமுள்ள கொங்கோவின் மேற்குப் பிரதேசம், மிகவும் பின்தங்கிய பகுதியாகும். கொங்கோவின் மறக்கப்பட்ட வாரிசுகள் என இந்த மக்கள் தம்மைத்தாமே அழைப்பதுண்டு.

இந்தக் கிராமத்தில் மருத்துவ வசதிகள் ஏதுமற்ற நிலையில் இந்த மரணங்கள் நடைபெற்றுள்ளன. வாந்தி, வயிற்றோட்டம், உள்ளக இரத்தப்பெருக்கு இந்த நோயின் குணங்குறிகளாகும்.

சடலங்கள்மூலமே, இந்த நோய் கிராமம் முழுவதும் பரவியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கொங்கோவில் பாரம்பரியமாக மரணவீடுகளில் சடலங்களை உறவினர்கள் முத்தமிடுவதும், கழுவுவதும் வழமை. இதனாலேயே 'எபோலா வைரஸ்' தொற்றிப் பரவியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

மரணவீடுகளுக்குச் செல்லாத 20 சிறுவர்கள் மட்டுமே இன்று அநாதைகளாக அந்தக் கிராமத்தில் தனித்துவிடப்பட்டுள்ளனர்.

தற்போது உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் இந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர்.



# ஐரோப்பிய சந்திர பயணம் அடுத்தமாத இறுதியில்



சந்திரனுக்கான ஐரோப்பாவின் முதல் விண் பயணம் அடுத்தமாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

நெதர்லாந்திலுள்ள ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் - இதற்கான அனுமதியைக் கடந்த புதன்கிழமை வழங்கியது. ஸ்மார்ட் - 1 என்னும் இந்த விண்கலம் அடுத்தவாரம் பயண ஏற்பாடுகளுக்காகப் ப்ரெஞ்ச் கயானவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.



கடந்த மார்ச் மாதம் இது புறப்படுவதற்கான சாத்தியம் இருந்தபோதிலும், கடந்த டிசம்பரில் ஏற்பட்ட சில தொழில்நுட்பக் கோளாறுகளினால் புறப்படுவது தாமதமானது.

# மாறிவருகிறது புளூட்டோ

**கோ**ள்களில் மிகவும் தொலைவிலுள்ள புளூட்டோவில் எதிர்பாராத மாற்றங்கள் சில நடப்பதாக அறிவிக்கப்படுகிறது. புளூட்டோ கிரகத்தின் வளிமண்டலம் தடிப்படைந்து வருவதுடன், அடுத்த 10 ஆண்டுகளில் இந்தக் கோள் உயர்நிலையை அடையலாம் என விண்வெளி ஆய்வாளர்கள் ஆருடம் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் 2006 ஆம் ஆண்டு - புளூட்டோ கிரகத்தை முதன் முதலாக ஆராய்வதற்காகச் செல்லும் புளூட்டோ- குயிப்பர் எக்ஸ்பிரஸ் செயற்கைக்கோள் அனுப்பும் தகவல்களிலிருந்தே, உறுதியான தகவல்கள் பெறப்படும். 2018 ஆம் ஆண்டில் இந்தச் செயற்கைக்கோள் புளூட்டோவைச் சென்றடையும்.



# அண்டவெளியில் புராதன கிரகம்



**அ**ண்டவெளியில் நாம் முன்பு எண்ணியதைவிட, மிக அதிகமான கிரகங்கள் இருப்பதாக விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹபின் தொலைக்காட்டி மூலம் - கிரகம் இருக்கமுடியாது என்று கருதப்பட்ட பகுதியில், புதிய கிரகம் ஒன்று காணப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கிரகம், வலுக்குறைந்த கிரகமாக இருப்பதாகவும், 13 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னையது எனவும், வியாழனைவிட இரண்டு மடங்கானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சூழல் மாசடைவதால் அபரித மர வளர்ச்சி!



**நி**யூயோர்க் நகரில் அதிகரித்துவரும் சூழல் மாசடைவால், அந்த நகரில் வளரும் மரங்கள் அபரிதமான வளர்ச்சியைக் காட்டுகின்றன. வளிமண்டலத்தில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களால், கிராமப்புறங்களில் செடிகளாக வளரும் தாவரங்கள், நியூயோர்க் நகரில் மரங்களாகப் பொருமுகின்றன.

நகர மாசடைதலுடன் சேர்ந்து, ஓசோன் படை உடைவினால் உள்நுழையும், சூரியனின் புறஊதாக் கதிர்களின் விளைவும், நகரங்களில் தாவர வளர்ச்சியில் மாற்றத்தைக் காட்டுவதாகக் கோர்னேல் பல்கலைக்கழகச் சூழலியலாளர் கிகேக் தெரிவிக்கிறார்.

# செய்மதி மூலம் புதைபொருள் ஆய்வு

**பு**தைபொருள் ஆய்வில் பல வருடங்களுக்கு முன், மண்ணில் புதையுண்டு போன பெறுமதியான பொருட்களைச் செய்மதிகள்மூலம் கண்டறியலாம் என்பதை, இஸ்ரேலிய விஞ்ஞானிகள் பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளனர்.





பென்குரியன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு ஆய்வாளர்கள் - தட்டையான அலுமினியப் பாளங்களை மண்ணில் ஆழமாகப் புதைத்த பின்னர், உயரே விமானத்திலிருந்து சில விசேட கமராக்கள் மூலம் புவி மேற்பரப்பைப் படம்பிடித்தபோது, அலுமினியப் பாளங்கள் உள்ளே புதைக்கப்பட்டிருந்தமை தெளிவாகத் தெரிந்ததாம். இந்த இஸ்ரேலிய ஆய்வாளர்கள், P - ரக மைக்ரோ அலை உணர்கருவிகளைக் கொண்டு இவற்றைக் கண்டுபிடித்தனர்.

# கலாஸ்னிக்கோவ் நிறுவனம் மாற்றுகிறது தொழிலை

**க**லாஸ்னிக்கோவ் என்றால் யரா் என்று தெரியுமா? அவர்தான் இன்று உலகில் பாவனையிலிருக்கும் ஏ.கே.47 ரகத் துப்பாக்கியை வடிவமைத்தவர்.

ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றிய போது, இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது, காயமுற்ற கலாஸ்னிக்கோவ் - மருத்துவமனைக் கட்டிலில் இருந்தபோது தான், ஏ. கே.47 துப்பாக்கியை வடிவமைத்தார்.

அவரது பெயரின் கருத்திலேயே, ஏ.கே. 47 என்று அவரது கண்டுபிடிப்பான துப்பாக்கிக்குப் பெயர் சூட்டப்பட்டது.

இன்று மிகவும் பிரபலமாகியுள்ள இந்த வகைத் துப்பாக்கிகள் பல்வேறு நாடுகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உலகில் இன்று பாவனையில் இருக்கும் பலகோடி ஏ.கே வகைத் துப்பாக்களைத் தயாரித்த கலாஸ்னிக்கோவ் நிறுவனம் - இப்போது தமது தொழிலில் சிறுமாறுபாட்டைச் செய்ய எண்ணியிருக்கின்றது.

அப்படி என்ன மாறுதல் என்று நினைக்கிறீர்களா?

ஆம், 'துப்பாக்கிகளைத் தயாரித்த இந்த நிறுவனம், இப்போது குடைகளை உற்பத்தி செய்யப்போகின்றது. இதற்காக ஜேர்மன் நாட்டுக் குடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தமும் செய்திருக்கின்றது இந்த நிறுவனம்.

இந்த நிறுவனம் உற்பத்தி செய்யும் குடை மழையிலிருந்து பாதுகாப்பு தருமா அல்லது துப்பாக்கியில் இருந்து பாதுகாப்புப் பெற்றுத் தருமா என்பதுதான் தெரியவில்லை.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### ஆட்டம் காணும் கூட்டணி !

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி நோக்கிய நகர்வுகளில் வேகம் குறைந்திருப்பதோடு - கூட்டணி ஒன்று ஏற்படுமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் வகையிலும் செய்திகளும் வர ஆரம்பித்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி எந்த நோக்கத்திற்காக ஜே.வி.பியைத் தனது துணைக்கு அழைத்துக்கொள்ள முயற்சித்ததோ, ஜே.வி.பி எதற்காகப் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச்சேர விரும்பியதோ - அந்த இரண்டு காரணங்களையும்விட, முக்கியமான புறக்காரணிகள் சூழ்ந்து வருகையில் - கூட்ட்ணிக்கான ஒருமைப்பாட்டைப் பேணிக்கொள்வதில் இரண்டு தரப்புக்களுமே தோற்றுவருவதாகவே தெரிகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை எவ்வாறும் எதிர்க்க வேண்டுமென்பதற்காக, 'எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத்தயார்' என்ற ரீதியில் - ஜே.வி.பியுடன் உறவுகளை வளர்த்துக்கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி ஆரம்பத்திலிருந்தே நோக்கம் கொண்டிருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் - கடந்தகாலத் தேர்தல் தோல்விகளும், உட்கட்சிப் பூசல்களும் ஒருபுறமாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகாலத்திற்குப் பின்னரான வெற்றி மறுபுறமாகவும்- அதனது தொண்டர் படைகளில் கணிசமானளவு வீழ்ச்சியைத் தந்திருந்ததால் - ஆட்களைத் திரட்டிக்கொள்ள வேனும் ஜே.வி.பியைத் தோழமையாக்கிக் கொள்ள வேண்டிய பெருந்தேவை, பொ.ஐ.முன்னணிக்கு இருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் - கொழும்பில் பேரணியொன்றை நடத்த முற்பட்ட பொ.ஐ.முன்னணி - முதலில் தான் தனியே பேரணி நடத்தப் போவதாக அறிவித்துவிட்டு - பின்னர், ஆட்கள் வருவார்களோ என்ற அச்சத்தில், ஜே.வி.பியுடன் இணைந்து அந்தப் பேரணியை நடாத்தி முடித்திருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

அதேவேளை - பொ.ஐ.முன்னணிக்குள் எழுந்த பதவிப் போட்டியாலும், ஜே.வி.பியை சேர்த்துக்கொள்வதன் மூலம் ஆதாயம் தேடிக்கொள்ளலாம் என, அனுரா பண்டாரநாயக்க போன்றோர் கணக்குப் போட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்ப்பதற்கு - கட்சிக்குள் சொல்லிக்கொள்ளும்படியான ஆதரவைக் கொண்டிராத அனுராவுக்கு - ஜே.வி.பி. ஆப்த நண்பனாகவே தோன்றியது. இதன் பிரதிபலிப்பாகவே - பொ.ஐ.மு - ஜே.வி.பி. கூட்டணிக்கு, அனுராவே முன்நடவடிக்கைகளிலும் முக்கியமாக ஈடுபட்டுவந்தார்.

இன்னொரு பக்கம் - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் நிலையில் - இச்சமாதான முயற்சிகளினூடாக குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏதேனும் கிட்டினால், அது, பொ.ஐ.முன்னணிக்கு இருக்கும் செல்வாக்கையும் பாதித்துவிடும் என்ற எண்ணமும்,

அவ்வாறான ஒரு சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு, பௌத்த சிங்கள பேரினவாதத்தைத் துணைக்கழைத்து அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதற்கு- ஜே.வி.பியே நல்லதொரு கருவி என்ற காரணமும் - ஜே.வி.பியுடன் நெருக்கமாகிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பொ.ஐ.முன்னணிக்கு வாரிவழங்கின.

அதேவேளை - ஜே.வி.பியைப் பொறுத்தமட்டிலோ - அதற்கான உடனடித் தேவைகள் எனப் பெரிதாக எதுவுமே பொ.ஐ.முன்னணியிடமிருந்து எதிர்பார்க்கப்படாதபோதும்,

பலவீனமுற்றிருக்கும் பொ.ஐ.முன்னணியிலிருந்து கிடைத்தவரை இலாபம் என்ற ரீதியில் - அரசியல் நடத்தவே ஜே.வி.பி முயன்றது.

கூட்டணி ஒன்று அமைக்கப்படுமானால், அதன் முக்கிய பொறுப்புக்களை, குறிப்பாக - பொ.ஐ.முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குச் சமதையான பதவிநிலையை அது கோரிய கோதாவிலிருந்தே - ஜே.வி.பியின் நிலைப்பாடு வெளிப்படையாகவே அனைவருக்கும் புரிந்தது.

பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வது பற்றி - அதன் முக்கிய தலைவர்கள் மனக்கசப்புடனிருந்தபோதும், அவை எல்லாவற்றையும் கடந்து முன்னேறிய கூட்டுமுயற்சிகள் - இன்று தாமதப்படவும், பின்னோக்கிச் செல்லவுமான திருப்பங்கள், ஜே.வி.பியின், பொ.ஐ.முன்னணியை 'ஓவர் ரேக்' செய்துவிடுவதான இந்த நடவடிக்கைகளால் மட்டும் விளைந்தவையே என்றும் கூறிவிட முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே, தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியதுபோல - தமது தந்தையைக் கொன்றவர்களுடன் கூட்டணி வைத்துக் கொள்வதை - தனது பிள்ளைகளே விரும்பவில்லை போன்ற தனிப்பட்ட விடயங்களும் இந்தத் தளர்வுக்கு முக்கிய காரணிகளாக இருக்கக்கூடும்.

எது எவ்வாறிருந்தாலும், இனிமேலும் முயற்சிகள் தொடரப்பட்டு பொ.ஐ. முன்னணி - ஜே.வி.பி கூட்டணி உருவாக்கப்படுகின்றதோ இல்லையோ - அது பல கசப்பான நினைவுகளிலும், செயற்பாடுகளிலும் மேலெழும்பும், அத்திவாரம் பலமில்லாத ஒரு கட்டடம் போன்றதாகவே இருக்கும் என்பது மட்டும் தெளிவானது.

# கேணல் சங்கருடன் வெளிநாடுகளிலிருந்து அரும்பணி செய்த லெப்.கேணல் நிர்மலன்

## வீரவணக்கக் கூட்டத்தில் கேணல் ஜெயம் புகழாரம்



கேணல் ஜெயம்

எமது விடுதலைப் புலிகள் இயக்கம் சிறு அமைப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தபோது, யாழ்ப்பாணத்தில் கப்டன் பண்டிதருடன் சேர்ந்து, மண் மீட்புக்காகப் போராடியவர்தான் மாவீரர் நிர்மலன். அந்தக் காலப்பகுதியில் இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு செயற்பாடுகளையும் இவர் முன்னெடுத்து வந்தார் என, முரசு மோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மாவீரர் லெப்.கேணல் நிர்மலனின் வீரவணக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய, தென்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றும்போது, மாவீரர் நிர்மலன் வெளிநாட்டுக்குச் சென்று, அங்கிருந்து போராட்டத்துக்காக, கேணல் சங்கருடன் இணைந்து கடுமையாக உழைத்தார். போராட்ட வாழ்க்கையில் நேரடியாகச் சண்டைக் களங்களிலிருந்து இவர் செயற்படாவிட்டாலும், போராட்டத்திற்காகப் பெரும்பங்காற்றியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு விசேட உளவுப்பிரிவில் நிர்வாக வேலைகளை மிகவும் திறம்படச் செய்தார். அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த விசேட படையணியின் வேலைத் திட்டங்களைத் தளபதிகளுக்குத் திருப்தியளிக்கக் கூடிய வகையில் செய்துமுடித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர பொன். தியாகம் உரையாற்றுகையில் -

எமது அமைப்புக்குத் தேவையான மிகவும் பொறுப்புள்ள வேலைத்திட்டங்களை வெளிநாட்டிலிருந்து மேற்கொண்ட போராளி இவர். விமானப்படைத் தளபதி கேணல சங்கருடன் இணைந்தும் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தார்.

சிறப்புப் படையணியுடன் தொடர்புடைய வேலைத் திட்டங்களைச் செய்துமுடித்துவிட்டு, மிகுதி நேரங்களில் கேணல் சங்கருடன் இணைந்து போராட்ட வரலாற்றை நூலாக வெளியிடவேண்டும் என்ற பற்றின் காரணமாக, அந்த நூலை எழுதி வெளியிடும் வேளையில், அவர் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்றார்.

லெப்.கேணல் நிர்மலனின் வித்துடல், கிளிநொச்சி முரசு மோட்டையிலுள்ள மாவீரரின் இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு - முருகானந்தா வித்தியாலயத்தில் இறுதி வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரைச் சிறப்புப் படையணித் தளபதி கேணல் சொர்ணம் ஏற்றிவைத்தார். மாவீரரின் துணைவியார் புகழுடலுக்கு மலர் மாலையை அணிவித்தார். தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தென்முனைக் கட்டளைத் தளபதி ஜெயம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரீ.இராசநாயகம், முருகானந்தா வித்தியாலய ஆசிரியர் விக்னராஜா ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து மாவீரரின் வித்துடல், கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவமரியாதையுடன் விதைக்கப்பட்டது.

இதில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் உட்படப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## அதிர்ஷ்டச் சீட்டுக்களில் மோசடி; பௌத்த பிக்கு ஒருவர் கைது!

### இவர் இராணுவத்தைவிட்டு தப்பியோடியவராம்

(கொழும்பு)

அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களில், இலக்கங்களை மாற்றி மோசடி செய்து, இலட்சக்கணக்கான ரூபாவைப் பெற்றுக்கொண்ட பௌத்தபிக்கு ஒருவரையும், அவரது உதவியாளரையும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் 'கைதுசெய்துள்ளனர.

இவர்களிடமிருந்து தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டன. இலக்கங்களை மாற்றும் உபகரணங்களும், இரசாயனப் பதார்த்தங்களும் இவர்களிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மோசடி செய்த நபர், எல்பிட்டி - இஹலவத்தையைச் சேர்ந்தவர் என்றும், இவரது உண்மையான பெயர் ஓபாத கங்கானங்கு அனுரகுமார எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர், பத்து ஆண்டுகளுக்கு முன்னர்- இஹலவத்தை சமித தேரர் என்று பெயர் மாற்றி, காலி, ரத்கம, கப்புமுல்ல, கங்காராம நாகவிகாரையின் அதிபதியாகவும் இருந்து வந்தவர் என்று குறிப்பிடத்தக்கது.

## கால்நடை அபிவிருத்திக்கென வட - கிழக்குக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில், கால்நடை அபிவிருத்திக்காக பெருமளவு வெளிநாட்டு நிதியுதவி பயன்படுத்தப்படவிருப்பதாக- விவசாய, கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி.திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முதலில், வட - கிழக்குப் பகுதிகளில் கால்நடை அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட இருந்தபோதும், அது தொடர்பாக நிதி அமைச்சுக்கும் தமது அமைச்சுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைகள், தற்போது தீர்க்கப்பட்டிருப்பதனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கக் கூடியதாக இருக்குமென, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்திருக்கிறார்.

## வடக்கு – கிழக்கை பிரிப்பதற்கு ஒரு இலட்சம் கையெழுத்துக்கள்!

### 'சிங்கள சங்விதானய' திரட்டுகின்றது

வடக்கு - கிழக்கு மாகாணங்களை, மீண்டும் உடனடியாகப் பிரிக்கவேண்டுமெனக் கோரி, 'சிங்கள சங்விதானய' இயக்கம் திருமலையில் கையெழுத்து வேட்டையொன்றை ஆரம்பித்திருக்கிறது. நேற்றுமுன்தினம், திருமலை நகரப்பகுதியில், இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிங்கள மக்களிடையே கையெழுத்துக்களைத் திரட்டுவதில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள், தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, இருவேறு மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் கோரி, ஒரு இலட்சம் கையெழுத்துக்களைத் திரட்டி, ஜனாதிபதியிடம் கையளிக்க இருப்பதாக 'சிங்கள சங்விதானய' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

## தேசிய அடையாள அட்டை வைத்திருக்காத 70 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது!

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லாமல், கொழும்பு மாநகருக்குள் நடமாடிய எழுபது தமிழ் இளைஞர்கள், கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் போதி லியனகே, பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தனியே விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த அல்லது ஆதரவான சந்தேகநபர்களை மாத்திரம் இலக்குவைப்பது என்றில்லாமல்,

பாதாள உலகக் கோஷ்டியினரையும் தேடுவதற்காகவுமே இந்தப் பொலிஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிய லியனகே மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் தேடுதல் நடவடிக்கைகளில், இரண்டு முக்கியமான பாதாள உலக கோஷ்டிகளின் முக்கிய பிரமுகர்கள் உட்பட, சில காலமாகத் தேடப்பட்டுவந்த பத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருககிறார்.

இதேவேளை - கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் தொடர்ந்தும் பாதாள உலகக் கோஷ்டியினரால் படுகொலைகளும், பாலியல் துஷ்பிரயோகங்களும், கொள்ளைச் சம்பவங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே ஒத்துக்கொண்டிருக்கிறார்.

## இடைக்கால நிர்வாக வரைபு அனுப்ப காலவரையறை கூறமுடியாதாம்!

### அரசாங்கத்தின் உயர் வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பான அரசாங்கத்தின் பிரேரணைகளை, விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைப்பதற்கு, ஒரு குறித்த காலவரையறையைத் தம்மால் உடனடியாக வெளியிட முடியாதிருப்பதாக அரசாங்கத்தின் உயர் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளிடம், இடைக்கால நிர்வாகத்தின் வரைபு பற்றிய நகலை அனுப்பிவைப்பதற்கு, நோர்வே அனுசரணையாளர்களிடம் உதவி கோரப்பட்டுள்ளபோதும்,

இந்த நகல் வரைபை, எந்தக் காலஎல்லைக்குள் அனுப்பி வைக்க முடியும் என்பது பற்றி உடனடியாகக் கூறமுடியாதிருப்பதாக அரச உயர் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# தமிழ்க்கட்சிகளை வைத்துப் பிரித்தாளும் அரசியல்; முனைந்து நிற்கும் அயல்நாடும் இனவாதக் கட்சிகளும் !

**கொழும்பிலிருந்து உதரன்**

இலங்கையின் உள்விவகாரத்தில் உலக நாடுகள் பல தலையிட்டு வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், கனடா, நோர்வே, ஜேர்மனி..... எனப் பட்டியல் நீண்டு செல்கின்றது. பொதுஜன ஐக்கிய



டக்ளஸ் தேவானந்தா

முன்னணியும், ஜே.வி.பியும் இந்தியாவின் பங்களிப்பு இலங்கைக்கு மிகவும் அவசியம் என வலியுறுத்தி வருகின்றன. மேற்குலக நாடுகளின் தலையீடு - இந்தியாவுக்கு அபாயகரமான நிலையைத் தோற்றுவிக்கும் என ஜே.வி.பி. எச்சரிக்கின்றது. ஆனால், இந்தியா இதுபற்றி எந்த விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. இந்தியாவுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றித் தகவல் திரட்ட, "றோ" அமைபு இருக்கிறது. "றோ" அமைப்பு - எப்போதுமே விழிப்பாக இருக்கும் என்பது, ஜே.வி.பிக்குத் தெரியாமல் போனது ஏனோ தெரியவில்லை.

மேற்குலக நாடுகள் மட்டுந்தான் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றன, எனச் சிங்கள அரசியல்வாதிகள் கூறினாலும், அயல்நாடு - தமிழர்களின் உள்விவகாரங்களில் தலையிடுவது ஏனோ தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக்கூட்டம் - கடந்த 6 ஆம் திகதி கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் கொழும்பிலுள்ள பத்திரிகையொன்று, கூட்டணித் தலைவரின் தலைமைக்கு ஆபத்து எனற விதத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தி அரசியல் வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்தச் செய்தி கூட்டணியின் தலைவருக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியது. உடனே அவர் சம்பந்தப்பட்ட பததிரிகையுடன் தொடர்புகொண்டு, செய்தியை வெளியிட்ட செய்தியாளரைத் தனது ஆத்திரம் தீரும்வரை திட்டித் தீர்த்தாராம், என்ற செய்தி தற்போது கசிந்துள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இலங்கையிலுள்ள அயல்நாட்டுத் தூதரகத்துக்கும் இந்த விடயத்தில், ஆத்திரம் வந்திருக்கிறதென்றால் பாருங்களேன். இலங்கையின் அயல்நாட்டுத் தூதரகத்தில் பேச வல்ல பெண்மணியொருவர் - செய்தியை வெளியிட்ட செய்தியாளரைத் தொலைபேசியில் அழைத்து, அன்போடு கடிந்து பேசினாராம். எச்சரித்தார் என்று பொருள் கொண்டுவிடாதீர்கள். யாழ்ப்பாணத் தமிழர்கள் அங்கு விசா பெறச்சென்றாலே, அங்குள்ளவர்கள் 'அன்போடு தானே' விசாரிக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக்கூட்டம், சுமுகமாக, நடைபெற்ற செய்தியையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். கொழும்புப் பத்திரிகை வெளியிட்ட செய்தி உண்மையல்ல என்பதைக் கூட்டம் நடைபெற்ற அன்றே ஊடகங்கள் வெளிப்படுத்தின. கூட்டணித் தலைவரின் பதவியும் பறிபோகவில்லை. அவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவரின் ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சி, அயல்நாட்டுத் தூதரகத்துக்கும் இரட்டிப்பு மதிழ்ச்சி. உண்மைநிலை யாருக்குத் தெரியும். கடவுளுக்குத்தான் தெரியும் என்கிறீர்களா?

ஆனால், உண்மைச் செய்தி தற்போது அரசியல் வட்டாரங்களில் கசிந்து கொண்டிருக்கிறதாம். கட்சிச் செயலாளருக்கும், வேறுசில முக்கியஸ்தர்களுக்கும் அயல்நாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் - சில ஆலோசனைகளையும், எச்சரிக்கை கலந்த அறிவுறுத்தல்களையும் வழங்கினார்களாம். அதன் பின்னர்தான்- கட்சிக் கூட்டம் எந்தச் சச்சரவுமின்றிச் சுமுகமாக நடந்தேறியதாம், என்று பேசப்படுகின்றது. இதுபற்றி ஊடகவியலாளர்கள் சிலர் கூட்டணி முக்கியஸ்தர்களிடம் கேட்டபோது, தட்டுத்தடுமாறிப் பூசிமெழுகுகின்றார்களாம்.

வெளிப்பார்வைக்கு - மேற்குலக நாடுகளின் தலையீடு மட்டுந்தான் தெரிகிறது. எமக்கு அருகிலிருக்கும் நாட்டின் தலையீடு எவருக்கும் வெளிப்படையாகத் தெரிவதில்லை என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

அண்மையில் அயல்நாட்டுக்குச் சென்ற அரசியல் பிரமுகர் ஒருவர்- இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கினால், அது இந்திய நலனுக்குப் பாதிப்பாக அமையும் என்று கூறியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அயல்நாடு என்றுமே இலங்கையில் தமிழர்களுக்கு என்றொரு தாயகம் உருவாகுவதை விரும்பியதேயில்லை. தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி, அவர்களுக்குள் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியமையை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

1983 ஆம் ஆண்டு, ஆடிக் கலவரத்துக்குப் பின்னரே, ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. பல விடுதலை இயக்கங்கள் தோன்றின, மறைந்தன. இதன் பின்னணியில் அயல்நாட்டின் பங்கு கணிசமாக இருந்தது என்பதை விடுதலை இயக்கங்களில் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

மாற்று அரசியல் நடத்துவதை விட்டுவிட்டு, தமிழ்மக்களின் நன்மை கருதி, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க முன்வரவேண்டும். தமிழர்களது பலவீனத்தைப் பயன்படுத்தி, ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் குளிர்காய நினைக்கின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால், அது தனிநாட்டுக்கான வழியை உருவாக்கிவிடும் என ஜே.வி.பியினர் எச்சரிக்கின்றனர். ஜே.வி.பியிலுள்ள - தமிழ் உறுப்பினர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகின்றார். அவர் தமிழைத் தமிழாகவே பேசமுடியாமல் பேசுவதாகப் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமிழர்கள் தமது சுயநலனுக்காகத் திசைமாறிச் செல்லும்போது, இனவாதிகள் அவர்களைத் தமது வலைக்குள் சிக்கவைக்க முயலுகின்றார்கள். இதனைத் திசைமாறும் தமிழர்கள் உணர்வார்களா?

இடைக்கால நிர்வாக யோசனைகளை அரசு முன்வைப்பதற்கு முன்னரே, முஸ்லிம்கள் தமக்குத் தனிய



ஆனந்தசங்கரி

லகு வேண்டும் எனக் குரலெழுப்பத் தொடங்கிவிட்டனர். முஸ்லிம்கள் தமது உரிமைகளைப்பெற, தமிழர்களுடன் சேர்ந்து போராட வேண்டும். இனவாதக் கட்சிகளிடம் உரிமைகளை ஒன்றிணைந்து கேட்டால்தான் பெறமுடியும். முஸ்லிம்கள் - சமாதான முயற்சிகள் சீர்குலையக் காரணமாகி விடக்கூடாது.

தமிழ்க் கட்சித் தலைவர்களைப் பிரித்து, மோதலை உருவாக்குவதில் இனவாதக் கட்சிகளும், அயல் நாடும திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றன. தமிழர்களின் மீது அக்கறை இருந்தால் மட்டுமே இந்தச் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் தப்பமுடியும்.

# சித்தமருத்துவத்துறையை நிறுவனமாக்க மாணவர்கள் தரப்பிலிருந்து போர்க்கொடி

## சித்தமருத்துவத்துறை பீடமாக்கப்பட வேண்டும்

அபிவிருத்தியடைந்த மேற்கத்தைய நாடுகள் பலவும், மாற்று மருத்துவத்துக்கு முக்கியத்துவமளித்து, இயற்கை மருத்துவத்தையும், மருந்துகளையும் பெருமளவில் பாவிக்கத் தொடங்கியுள்ளன. இலங்கையில் - அதிலும் தமிழ்ப் பிரதேசங்களில், 75 வருடங்களுக்கு முன்புவரை, மிகப் பிரபல்யமடைந்து - மக்களின் நோய்களைத் தீர்த்ததில் பெரும் பங்கு, எமது பூர்வீக மருத்துவமான சித்த மருத்துவத்திற்கே உரித்தானது. ஆனால், இன்று அதன் நிலை மிகவும் தாழ்ந்துபோய்க் கிடக்கின்றது. முன்னேற்றுவதற்கு உழைக்கவேண்டிய முக்கியமானவர் பலரும் அதைப்பற்றி அக்கறைப்படவேயில்லை.

ஆயினும், 1984 இல் இருந்து, யாழ்.பல்கலைக்கழகத்தில், சித்த மருத்துவத்துறை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - ஓரளவு விழிப்படைந்து, சுதேச மருத்துவத்துறை மீண்டும் முன்னேற்றம் கண்டுவரும்போது, 2000 ஆம் ஆண்டு போர்ச் சூழல், சித்தமருத்துவத் துறையை மிகவும் பாதித்துவிட்டது. இருந்தும், எமது சொந்த மருத்துவமானது மீண்டும் உயிர்த்து வருகின்றது. இப்படியான நிலையில் - சித்த மருத்துவத் துறை, விரைவில் சித்த மருத்துவபீடமாக்கப்பட்டு விடும் என நம்பிக்கொண்டிருக்கையில், சித்த மருத்துவத்துறை தனி நிறுவனமாக்கப்படப்போகின்றது என, பத்திரிகைகளில் அண்மையில் வெளியான செய்திகள்- அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளித்தன. ஏன் இந்த அநியாயவேலை? எதற்காக இந்த அழிப்பு முயற்சி?

இந்த நிறுவனமாக்கல் முயற்சி கைவிடப்பட்டு, சித்த மருத்துவத்துறையானது, "சித்த மருத்துவபீடமாக" தரம் உயர்த்தப்பட்டு, யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாகவே தொடர்நதும் இருக்கவேண்டும். இது மிகமிக அவசியமானதாகும். அவ்வாறு இருக்கும்போதுதான், சித்தமருத்துவம் சிறப்புற வளரமுடியும். திறமையான மாணவர்கள் (க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடப் புள்ளிகளின் அடிபபடையில்) உள்வாங்கப்படவும், (இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள முறைமைபோல) சித்த மருத்துவ மாணவர்கள், மற்றையபீட மாணவர்களுடன் இணைந்து (முக்கியமாக விவசாயபீடம், விஞ்ஞானபீடம், மருத்துவபீடம்), தமது ஆராய்ச்சிகளையும், தகவல் பரிமாற்றங்களையும் மேற்கொள்ளவும் முடியும்.

2000 ஆம் ஆண்டில், சித்த மருத்துவ மாணவர் ஒன்றியமானது - மாணவர்கள் அனைவரினதும் ஒப்பத்துடனும், அப்போதைய துறைத்தலைவர் மற்றும் அப்போதைய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரின் சிபார்சுடனும், துணைவேந்தரூடாகவே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குச் சித்த மருத்துவத்துறையை, சித்த மருத்துவபீடமாக்குமாறு கடிதம் மூலம் கோரியிருந்தது.

இவற்றையெல்லாம் விடுத்து, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும், இன்றைய துணைவேந்தரும் -

1. **சித்த மருத்துவத்துறையைத் தனி நிறுவனமாக்குதல்.**
2. **இந்தத் துறையைக் கொழும்பு சுதேச மருத்துவ நிறுவனத்துடன் இணைத்தல்.**
3. **யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்துடன் இணைத்தல்.**

போன்ற முயற்சிகளில் ஒன்றினைச் செய்ய முற்பட்டுள்ளனர்.

இது - எமது தமிழ்ப் பிரதேசத்துக்கும், தமிழ் மக்களுக்கும், சித்த மருத்துவ மாணவர்களுக்கும், ஏன் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும் செய்யும் மிகப்பெரிய வரலாற்றுத் துரோகமாகும். ஏனெனில், முன்பிருந்த துணைவேந்தர்கள் எவரும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவோ அல்லது அவற்றிற்குத் துணைநிற்கவோ இல்லை. அவர்கள் இத்துறையினைச் சித்த மருத்துவபீடமாக்கவே முனைந்தார்கள்.

மாணவர்களைப் பாதிக்கும் இப்புதிய முயற்சி பற்றி - சித்த மருத்துவ பட்டதாரிகள், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நமது தமிழ்ப் பெரியார்கள், விடுதலைப் புலிகள், அரசியற்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ்மக்கள் உடன் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எனவே, சகலதரப்பினரும், இந்த முயற்சிக்கு எதிரான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு, சித்த மருத்துவத்துறையினை, 'சித்த மருத்துவ பீடமாக' தரமுயர்த்த உறுதுணையாக இருக்கவேண்டும் என மிகவும் தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

**- வெளியேறிய சித்தவைத்திய மாணவர்கள் சார்பில.**

## சித்தமருத்துவமும் நிறுவனமாக்கலும்

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள், கடந்த செவ்வாய்க் கிழமை தொடக்கம் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றமை தெரிந்ததே.

சித்த மருத்துவத்துறையை - கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக்கல், யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு நிறுவனமாக்கல், கொழும்பு ஆயுர்வேத - யுனானி நிறுவனங்களுடன் சேர்த்தல் ஆகிய மூன்று நிபந்தனைகளையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ். பல்கலைக்கழகத்திற்கு விடுத்திருந்தது.

ஆனால், பல்வேறு பிரிவுகளைக் கொண்ட சித்த மருத்துவத்தினை, குறிப்பிட்ட ஒரு பீடத்தின்கீழ் துறையாகச் செயற்படுத்துவது கடினம் என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

இறுதி இரண்டு நிபந்தனைகளும் பல்கலைக்கழக அந்தஸ்திலிருந்து விலத்தி, துணைவேந்தரின் கட்டுப்பாடற்ற ஒரு தனி நிறுவனமாக்குவதற்காகும். அதிலும் இவ்விரு நிபந்தனைகளும், இறுதியில் மீண்டும் சித்தமருத்துவத்தை கொழும்புக்குக் கொண்டு செல்வதனையே அடிப்படையாகக் கொண்டவை.

இதன்மூலம், சித்தமருத்துத்தின் தனித்துவம் இழக்கப்போவது உறுதி. அதிலும் தமிழ்ப பிரதேசத்திற்குரிய மருத்துவம், அதற்குரிய இடத்தில் இருப்பதே அதற்குச் சிறப்பு.

மேற்கூறிய 3 முடிவுகளிலும், நிறுவனமாக்கும் செயற்பாடு, துரிதகதியில் - குறிப்பிட்ட சிலரால் - அரசியல் செல்வாக்குடன், சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்களுக்கோ அல்லது மாணவர்களுக்கோ எவ்வித முன்னறிவிப்புமின்றிச் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள் பெரும் விசனம் அடைந்துளளனர்.

சித்தமருத்துவத்தை, வளர்ச்சியடையச் செய்வதற்கு எனக் கூறி, சிலர் தனிப்பட்ட நன்மை கருதிச் செயற்படுவதைக் கண்டித்தும், நிறுவனமாக்கலை உடன் நிறுத்தும்படி கோரியும், அவ்வாறு சித்த மருத்துவத்தைத் தரமுயர்த்துவதெனில், அதனைப் பீடமாகத் தரமுயர்த்தும்படியும் கோரி, மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை பல்கலைக்கழகத்திலிருந்து எந்தவிதமான சாதகமான பதிலும் தரப்படவில்லை.

ஆனால், உருவாக்கப்படும் நிறுவனத்திற்குரிய செயற்குழு தேர்வுசெய்யப்பட்டு, அதற் குரிய சட்டம் துணைவேந்தரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனால், மாணவர்கள் தமது போராட்டத்தை விஸ்தரிப்பதுடன், தமிழீழ மாணவர் பேரவை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஏனைய பீட ஒன்றியங்கள், BSMS பட்டதாரிகள் சங்கம் போன்றவர்களிடம் தமக்கான ஆதரவைப் பெற்றுள்ளனர்.

அத்துடன், அனைத்துத் தரப்பினரிடம் இருந்தும் தமக்கான ஆதரவைக் கேட்கின்றனர். இதைவிட, புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினர்களையும், தவறான ஒரு முடிவுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்போவதாகக் கூறியுள்ளனர்.

கைநழுவ இருக்கும் சித்த மருத்துவத்தை, கை நழுவவிடாது இருக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். **- தற்போதைய சித்த மருத்துவத்துறை மாணவன்.**

# இலட்சியப் பயணத்தை முன்னெடுக்க உந்துசக்தியாகத் தமிழ் ஊடகங்கள்!

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர்கள் - கடந்த சனிக்கிழமை மாலை, கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, சு.ப.தமிழ்ச்செல்வன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களைத் தருகிறோம்.**

**(தொகுப்பு - இரா.துரைரத்தினம்)**



இனப்பற்றுடனும், தமிழ்த் தேசிய உணர்வை பிரதிபலிக்க கூடிய வகையிலும் தமிழ் ஊடகங்களின் வெளிப்பாடுகள் இருப்பதையிட்டு, திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இது ஒரு வரலாற்றுக் கடமை. விடுதலைப் புலிகளுக்காக மட்டுமல்ல, எங்களுடைய இனத்திற்கான வரலாற்றுக் கடமை என்ற ரீதியில், தமிழ் ஊடகங்கள் அந்தப் பணியை செவ்வனே ஆற்றிக்கொண்டிருக்கின்றன. இது ஒரு முக்கியமான பணி என்றுதான் கருதுகிறேன்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததென்று சொல்லப்படுகின்ற காலத்திலிருந்து, எங்கள் இனம் ஒடுக்குமுறைக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறது. என்றோ ஒருநாள் இந்த வரலாற்றை மாற்றியமைத்தே ஆகவேண்டும்.

இந்த வகையில்தான் எங்கள் தலைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரும் உறுதியாக இருக்கிறார்கள். இதுவரை எவ்வளவோ சவால்களையும், நெருக்கடிகளையும் சந்தித்தபோதும் புலிகள் இயக்கம் - இனத்தின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதில் எந்த மாற்றமும் இல்லை. இன்னமும் வளர்ச்சியை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கிறது. போராட்ட வடிவங்கள் மாறியிருக்கலாம். ஆனால், எங்கள் இலட்சியத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இலங்கையில் இருக்கும் ஊடகங்களை - இனவாத ஊடகங்கள், சந்தர்ப்பவாத ஊடகங்கள், கொள்கை ரீதியான ஊடகங்கள் என, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அந்த வகையில், தமிழ் ஊடகங்கள் - நெருக்கடியான யுத்த சூழலிலும், சுமுகமான சூழலிலும் - இலட்சியம், இலக்கு என்ற ரீதியில் உறுதியாக நிற்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆனால், தென்னிலங்கையில் வேறு நோக்கங்களுடன் உருவாக்கப்பட்ட பல ஊடகங்கள் இருக்கின்றன. அவை தேவைக்கேற்றமாதிரி மாறிக்கொண்டிருக்கும். இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, காலத்திற்குக் காலம் ஆட்சிமாற்றம் நடக்கும். ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் மாறி மாறி பெரும்பான்மை இனத்தினுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுகின்ற நோக்கில் ஆட்சியைக் கைப்பற்றுகின்றன. அதற்கேற்ப ஊடகங்களிலும் மாற்றங்கள் நடக்கும்.

அவை அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டவை. எங்களைப் பொறுத்தவரை - ஒரே இலட்சியம், ஒரே இலக்குத்தான். எங்களுடைய தேசம், மக்களுடைய எதிர்பார்ப்புப் பற்றியதுதான் எமது இலட்சியம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, நாங்கள் எதிர்பார்ப்பது இதுவேதான்.

எல்லோரும் ஒன்றுபட்டுநின்று உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். நாங்கள் பழைய வரலாற்றை நோக்கித் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். 17 ஆயிரத்து 600 இற்கு மேற்பட்ட இளைய தலைமுறையினர் உயிரைக்கொடுத்துத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. உயிர் கொடுத்த பொதுமக்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்திற்கு மேல். இவ்வளவு உயிர்த் தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும்தான் தமிழீழ சுதந்திர போராட்டத்தில் நிமிர்வு, எழுச்சி ஏற்பட்டதை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது.

இனவாதத்தைப் பரப்பும் வகையில் - சிங்கள, ஆங்கில ஊடகங்கள், தவறான கருத்துருவாக்கத்தையும், தப்பபிப்பிராயங்களையும் ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை - தமிழ் இனத்தின் அபிலாஷைகள் எதுவோ, அதற்காக அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தி, இலட்சியத்தை நோக்கிச்செல்வதுதான் குறிக்கோள். அந்த வகையில் எமது செயற்பாடுகள் அமையும். அதற்காகத் தமிழ் ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

சாதாரணமாக - மக்கள் நெருக்குவாரங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாகாத இயல்பான நிலையில், வித்தியாசமான போக்கைக் கடைப்பிடிக்கலாம். ஆனால், எங்கள் இனமும், தேசமும் ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு, ஆபத்தான நிலையில் நின்றுகொண்டு, அதற்கு முகம் கொடுத்து அதிலிருந்து மீளவேண்டும் என்ற குறிக்கோளுக்காக தள்ளப்பட்டிருக்கின்ற சூழலில், ஊடகங்களுக்கு வித்தியாசமான பணி இருக்கிறது.

எங்கள் இனத்தின், இலட்சியப் பயணத்தை முன்னெடுக்கும் உந்துசக்தியாக இருக்கும் பொறுப்பு, தமிழ ஊடகங்களுக்கு உண்டு. தென்னிலங்கையைப் பொறுத்தவரை - அது வேறு. அவர்களுக்கு என்றொரு நாடு, தேசம் என்ற அங்கீகாரம், நம்பிக்கை உறுதிப்பாட்டுடன் இருக்கிறார்கள்.



**ஊடகவியலாளர்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு**

தமிழ்மக்களைப் பொறுத்தவரை - அது இன்னமும் இல்லை. ஆபத்தான விளிம்பில்தான் இருக்கிறது. உரிமைகள் மறுக்கப்பட்டு, ஆக்கிரமிப்புச் சூழலுக்குள்தான் எங்கள் இனம் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த இனத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கும், எதிர்காலத்திற்கும் ஏற்ப பணிகளை எல்லோரும சேர்ந்து ஆற்றவேண்டும். அதில் தமிழ் ஊடகங்களுக்கு மிகப் பிரதான பணி இருக்கிறது.

எங்கள் தேசததினதும், இனத்தினதும் - காலம் காலமாக பூர்வீகமாக இந்த மண்ணில் எங்கள் அடையாளங்களை நிலைநிறுத்திக் கொண்டு, எங்கள் கௌரவங்களைப் பேணிக் கொள்வதும், இனத்தின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்திக்கொள்வது என்றவகையில், உங்கள் பணி அமையவேண்டும். எங்கள் தனிப்பட்ட சுயநலத்திற்காக நாங்கள் எதையும் வேண்டவில்லை.

எங்கள் விடுதலை அமைப்பைப் பொறுத்தவரை - தமிழ்மக்களின் இலட்சியத்தை அடைவதற்காக, பின்னிற்கப்போவதில்லை. இந்த உறுதியான நிலைப்பாட்டை நீங்கள் மக்களிடம் முன்வைக்கலாம்.

(தொடரும்)

---



**தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளில் ஒருபகுதியினர்.**

# தாயகத்தைக் காண்பதற்கு அலைகடலேறி வந்தோம்!

(நெடுந்தீவு)

தமிழ்நாடு தர்மபுரி மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஆறு குடும்பங்ளைச் சேர்ந்த இருபத்தொரு ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்காக, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், யாழ்.செயலகத்தில் நேற்று ஒப்படைத்தார்.

மன்னார் கரையில் இறக்கிவிடுவதாகக் கூறி ஒவ்வொருவருக்கும் மூவாயிரம் ரூபாயை அறவிட்ட இந்திய மீன்பிடிப்படகு உரிமையாளர், இரவு நேரத்தில் அவர்களை கச்சதீவில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

அங்கு உணவு, குடிநீர் வசதியின்றித் தவித்த இவர்களை இன்னொரு இந்திய மீன்பிடிப்படகு எந்தவிதக் கட்டணமும் அறவிடாமல் நெடுந்தீவில் கொண்டுவந்து தரையிறக்கியது.

இவர்களை நெடுந்தீவுக்கு கொண்டுவந்த இந்திய மீன்பிடிப்படகு கற்பாறையுடன் மோதுண்டு, சேதமடைந்தமையால் அகதிகள் கொண்டுவந்த பொதிகள், உடைமைகள் நீரில் அடித்துச்செல்லப்பட்டன.

படகோட்டிகள் நெடுந்தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் மீன்பிடிப்படகு முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதேவேளை - யாழ்.செயலகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், ஆயிரம் ரூபா வீதம் உதவித்தொகை வழங்கப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தாயகம் திரும்பிய அகதிகளில் - திருகோணமலை குச்சவெளியைச் சேர்ந்தவர்களான -

பா.ஜீவராசா (வயது 55), ஜீ.அன்னபூரணி (வயது 49), ஜீ.சிறிகாந் (வயது 23), ஜீ.ரஜனிகாந் (வயது 21), ஜீ.கிஸ்ணராஜ் (வயது 18), ஜீ.மெய்யய்யா (வயது 48), ஜீ.ஜெயகாந்தன் (வயது 28), ஜெ.இமயரஞ்சினி (வயது 23), ஜெ.பிரவீந்த் (வயது 02), ஜெ.சுகிர்தா (07 மாதம்), க.ஜெகன் (வயது 19), பா.ஆனந்தராஜா (வயது 40), ஆ.உதயரஞ்சினி (வயது 39), ஆ.சுரேஸ் (வயது 16), ஆ.சுமன் (வயது 15), ஆ.சுதர்ஷன் (வயது 02) மற்றும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பு.ஜெகதீஸ்வரன் (வயது 25) மன்னார் முருங்கனைச் சேர்ந்த - செ.செல்வநாதன் (வயது 31), செ.புவனேஸ்வரி (வயது 27), செ.வளர்மதி (வயது 10), செ.வானதி (வயது 08) ஆகியோர் அடங்கியுள்ளனர். (113)



**பா.ஜீவராஜா (வயது 55)**

***குச்சவெளி, திருகோணமலை***

நாட்டுப்பிரச்சினை காரணமாக உயிர் பிழைத்தால் போதுமெண்டு எனது குடும்பத்தாருடன் இந்தியா செல்லவென - குச்சவெளியில் இருந்து ஒவ்வொரு இடமாக இடம் பெயர்ந்து சென்று தாளையடிப் பகுதியூடாக சொந்தப்படகு மூலம் இந்தியா சென்றோம். ஆனால், ஆரம்பத்தில் முகாமில் இருந்தபோல, தற்போது வசதிகள் இல்லை. தண்ணீர் 2 குடம்தான் ஒருநாளைக்கு. அது வழங்கிற நேரம் எடுக்காவிட்டால் அன்றைக்கு எமக்கு தண்ணீர் இல்லை.

அது மட்டுமில்லை, இப்ப பொருட்களின் விலையெல்லாம் வெகுவாகக் கூடிவிட்டது. அதனால அவர்கள் 15 நாளுக்கு தரும் 100 ரூபா குடும்பத்துக்குக் காணாது. வெளியில வேலைக்குப் போனாலும் உழைக்கலாம். அப்பிடி வெளியில போய் நேரம் பிந்தி முகாம் திரும்பினால் அகதிப்பதிவை வெட்டிடுவாங்க.

அதனாலதான் - இப்பிடி வெளிக்கிட்டு வாறம். இன்னும் இங்க வாறத்துக்கு சனம் கனக்க இருக்கு.

முன்னர் 2 ரூபா, 3 ரூபா விற்ற காய்கறிகள் இப்போ 15 ரூபா விற்குது. அதோட வேலைக்குப் போய் உழைக்கேலாது. கடன் கேட்டால் இந்தியாக்காரங்க சொல்லுறாங்க "உங்களுக்கு என்னப்பா. 65 காசுக்கு அரசு அரிசிபோடுது. எங்களுக்குத்தான் கஷ்ரம்" என்று. அதனால நாங்க ஒண்ணுமே பேசாம பட்டினி கிடக்கவேண்டியதுதான்.

எங்கட முகாமில 55 குடும்பங்கள் இருக்கு. சரியான கஷ்ரம். எல்லாம் வரத்தான் இருக்கினம். கொடுக்க காசு இல்லாம இருக்கினம். அப்பிடி கஷ்ரப்பட்டு காசக் கொடுத்தாலும், சிலவேளை ஏமாத்திப்போட்டு போயிடுவாங்க. அதுவும் எங்கட இலங்கை ஆக்கள்தான் செய்யிறாங்க.

**பு.ஜெகதீஸ்வரன் (வயது 25)**

***வல்வெட்டித்துறை***

1990 இல் நாட்டுப்பிரச்சினை காரணமாக இந்தியாவுக்கு தப்பி ஓடினோம். ஆரம்பத்தில அகதிமுகாமில எங்கள நல்லாப் பாத்தாங்கள். தற்போது இலங்கையர் என்றதுமே ஒரு மாதிரியாப் பார்க்கிறாங்கள். பொருட்களின் விலையெல்லாம் அதிகம். அங்க உழைச்சு வாழ முடியாது. கூலிகளும் குறைவு.



இங்க வாறதுக்காக நிறையப்பேர் படகுக்காரங்களுக்கு பணத்தைக கொடுத்திற்று, ஏமாற்றப்பட்டு அகதி முகாமில பேரும் வெட்டுப்பட்டு இப்ப என்னசெய்யிறதெண்டு தெரியாமல் இருக்கிறாங்கள்.

இப்பவும் நாங்கள் இங்க வரும்போதும் கச்சதீவில இறக்கிவிடப்பட்டு பிறகொரு இந்தியப் படகு மூலம நெடுந்தீவுக்கு வரேக்க கரையில பாறையில மோதுண்டு, படகு உடைஞ்சிட்டுது. அதனால சின்னப்பிள்ளையள், பொம்பிளையள் எல்லாரையும் தூக்கியே கரைசேர்த்தோம்.

அதனால நாங்க கொண்டுவந்த பொருட்கள்ள பல கடலோட போயிற்றுது. ஏதோ உயிர் தப்பிவிட்டோம்.

இப்ப இலங்கையங்கள் என்றாலே அங்க ஒதுக்கி வச்சிடுவாங்க. எங்களுக்கு 10 லீற்றர் எண்ணையும், அவங்களுக்கு 3 லீற்றர் எண்ணையும் கொடுத்தாங்க. அதுக்கே அவங்க இப்பவும் சொல்லுறாங்க "ஓட்டுப் போட்ட எங்களுக்கே மூன்று லீற்றர், ஓடிவந்த உங்களுக்கு பத்து லீற்றரா? எண்டு.

**ஜீ.அன்னபூரணி (வயது 49)**

***குச்சவெளி***

இப்ப இந்தியாவில முகாமில எல்லாம் இருக்கிறது ரொம்பக் கஷ்டம். எல்லா சாமானும் விலை ஏறிற்று. அதனால சாப்பாட்டுக்கே சரியான கஷ்டம். அதோட குடிதண்ணீருக்கு சரியான கஷ்ரம். அதனாலதான் நாங்க பணத்தைக் கொடுத்து இப்பிடி வந்தோம்.



அங்க முகாமில இருக்கிற ஆக்களும் இங்க வர்றதுக்குத்தான் இருக்கினம். அண்மையில் இலங்கையில் விடுறதாகக்கூறி கச்சதீவில பதினைஞ்சு பேர இறக்கிவிட்டுட்டாங்கள். அவங்கள் அங்க சாப்பாடில்லாம 10 நாளாக கிடந்த பிறகு இந்திய நேவி மீட்டு, இந்திய ஆஸ்பத்திரியில வச்சிருக்கினம். எப்படியெல்லாம் நாங்க கஷ்ரப்பட வேண்டியிருக்கு.

***சந்திப்பு - கண்ணன்***

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம்களுக்கு சமத்துவம் தேவை இல்லாவிடின் ஆட்சியில் மாற்றம் வரும்

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எச்சரிக்கை

(கல்முனை)

"அரசு முன்னெடுக்கும் இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பு வரைபுத் திட்டத்தில், வட - கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு சமத்துவமான தீர்வு நிச்சயமாக உள்ளடக்கப்படாவிட்டால், இந்த நாட்டில் தேசிய அரசியலில் காத்திரமான மாற்றம் வருவதனை எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது."

- இவ்வாறு, அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில், கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் மேற்கண்டவாறு கோரினர்.

விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

"பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டபோது, வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஒருபோதும் அதற்கு நிகரான ஒப்பந்தம் வேண்டுமெனக் கேட்கவில்லை.

1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டபோதும் அவ்வாறு கோரவில்லை. ஏன்? 1982 ஆம் ஆண்டு இந்த நாட்டில் இனப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திச் சபை முறையை ஜே.ஆர்.ஜயவர்த்தன அறிமுகப்படுத்தியபோது கூட முஸ்லிம் மக்கள் வட - கிழக்கில் தனியான அபிவிருத்திச் சபை தாருங்கள் எனக் கேட்கவில்லை.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டபோதுகூட, முஸ்லிம்கள் எமக்குத் தனியான மாகாண சபையைத் தாருங்கள் என உரத்துப் பேசவில்லை.

ஏனெனில், அன்றைய காலகட்டத்தில் - முஸ்லிம்களும், தமிழர்களும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் வாழ்ந்தார்கள்.

ஆனால், 1985 ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர்தான் முஸ்லிம்கள் சுயரூபங்களை விளங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

நாங்கள் சேர்ந்து வாழவேண்டும் என்று இன்றும் பிரார்த்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் வாழவேண்டும் என்னும்போது, ஒற்றுமையைக் குலைத்து, பிரித்துவிடுங்கள் எனத் தமிழர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எனவேதான், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைபில் சமமான - சமாந்தரமான தீர்வு - ஐம்பதுக்கு ஐம்பது என்ற ரீதியில் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதை, அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக இன்று எல்லோரும் பகிரங்கமாகப் பேசுகின்றனர். விடுதலைப் புலிகள் இதில் ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

ஆனால், தெளிவாக நாம் ஒன்றைக் கூறியுள்ளோம். இடைக்கால நிர்வாகசபையில், வெள்ளவத்தையை வேண்டுமானால் உள்ளடக்குங்கள். காலியை, ஜின்கங்கையை, அலரி மாளிகையை வேண்டுமானாலும் உள்ளடக்குங்கள்.

இந்தப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களை, ஆளுகின்ற அதிகாரம் முஸ்லிம்களின் கைகளுக்கே தரப்படவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் உரையாற்றுகையில்- இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பு வரைபு தொடர்பில் நாம் ஒருபோதும் மௌனமாக இருக்கப்போவதில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்கின்ற முழுமையான இடைக்கால நிர்வாகத்தில்- முஸ்லிம் மக்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

கொழும்பு நிர்வாகத்தின் கீழிருந்து, யாழ்ப்பாணத்திலுள்ள அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாதெனக்கூறும் விடுதலைப் புலிகள், யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு பொத்துவிலில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகின்றார்கள்?

எனவே, வட - கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களின் தலைவிதியை, முஸ்லிம் மக்களே தீர்மானிக்கவேண்டுமென்ற அடிப்படையிலேயே முஸ்லிம்களுக்கென்ற தனியான இடைக்கால நிர்வாகசபை அமையப்பெறவேண்டுமென்பதில், மிகத்தெளிவாக உள்ளோம்.

அரசின் நகல் திட்டம் நிச்சயம் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள், முஸலிம் பிரதேசங்களின் நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றை தனியே உள்ளடக்கியதாக அமையாவிட்டால், நிச்சயம் முஸ்லிம்களின் பிரச்சினை வேறொரு கோணத்தில் திசைமாறும்.

கடந்த வருடம்போல் அரசு மீண்டும் விடுதலைப் புலிகளின் கோரிக்கையில், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளைப் புறந்தள்ளிவிட்டு, தனியான இடைக்கால நிர்வாகத்திற்குச் சம்மதிக்குமானால், தேசிய அரசியலில் மாற்றங்கள் வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அப்பொழுது எமது பலம் என்ன என்பதை இந்த நாட்டுக்குத் தெரியப் படுத்துவோம் என்று கூறினார்.



முன்னாள் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் வீரரும், தற்போது இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படவுள்ளவருமான ஜோன் டைசனை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உதவித் தலைவர் அரவிந்த டீ சில்வா வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## வெள்ளைப் பூரான் கடித்து யுவதி மரணம்

(நவக்கிரி)

அச்சுவேலி - வளலாய்ப் பகுதியில் வெள்ளைப் பூரான் கடித்து யுவதி ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம், கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வளலாய்ப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை யோகேஸ்வரி (வயது 29) என்ற யுவதி, தனக்கு காலில் பூரான் கடித்துவிட்டதாகவும், மயக்கம் வருவதாகவும் கூறினார். இதையடுத்து, குறித்த யுவதி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப் பட்டபோது - வழியில் மரணமானார்.

# நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர் மாகாணக் கல்வி அமைச்சிடம் முறையீடு!

நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்கள், வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சிடம் மேன்முறையீடு செய்துள்ளனர். அண்மையில் வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் 910 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இந்தப் பட்டியலில் இடம் கிடைக்காத தொண்டராசிரியர்களே மேன்முறையீடு செய்துள்ளனர்.

நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்கள், மேன்முறையீடு செய்யுமாறு மாகாணக் கல்வியமைச்சு கேட்டிருந்தது.

யாழ், தீவக வலயங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் - மாகாணக் கல்வியமைச்சின் கல்வி அதிகாரிகளிடம், யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் வைத்து நேரடியாகவே தமது மேன்முறையீட்டினைச் செய்துள்ளனர்.

இன்று - வலிகாமம் வலய தொண்டராசிரியர்களும், நாளை - வடமராட்சி வலய தொண்டராசிரியர்களும், நாளைமறுதினம் - தென்மராட்சி வலய தொண்டராசிரியர்களும் தமது மேன்முறையீட்டினை, வட - கிழக்கு மாகாண கல்வி அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

# பன்னிரு மாவீரர்களுக்கும் இன்று வவுனியாவில் அஞ்சலி

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடலுக்குச் சமீபமாக விடுதலைப் புலிகளுடைய எணணைக் கப்பல், கடற்படையினரால் தாக்கப்பட்டபோது வீரச்சாவடைந்த 12 மாவீரர்களுக்கான அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை வவுனியா தோணிக்கல், பைட்டர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி புலிகளுடைய வர்த்தக கப்பல் தாக்கப்பட்டு சர்வதேசக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

மலிவு! மலிவு!! மலிவு!!!

அனைவரது வேண்டுகோளுக்கு இணங்க அண்மைக்காலத்து வெளியீடுகளான மருத்துவத்துறை, விஞ்ஞானத்துறை, கணிதத்துறை, வர்த்தகத்துறை, முகாமைத்துவத்துறை, விவசாயத்துறை, கலைத்துறை, நாவல்கள், சிறுவர்களுக்கான ஆங்கில, தமிழ் நூல்கள் பல்துறை சார்ந்த அகராதிகள், பட்டப்பின் படிப்பிற்கான நூல்கள் சார்ந்த சகல நூல்களும் மலிவு விலையில் விற்பனை செய்வதற்கான புத்தகக் கண்காட்சியினை யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக் கழக சமூகத்துடன் இணைந்து கொழும்பு ஜெயா புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்துகின்றது.

இடம் : யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம், முகாமைத்துவ மண்டபம் II
காலம் : 15.07.2003 தொடக்கம் 30.07.2003 வரை
நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (பு.நே)

குறிப்பு: இதுவரை கண்டிராத, எதிர்காலத்தில் கிடைக்க முடியாத சலுகை விலையில், புதிய வெளியிடுகள் விற்பனை செய்யப்படுவதால், உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பிரதேச சபைகள், மற்றும் தனிப்பட்டோர் கொள்வனவு செய்து பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(420)

## இந்து சமய அமைச்சு பொறுப்பேற்பு

நோர்த் சீ நிறுவனம், நேற்று முதல் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் வந்துள்ளது.

இதன் தலைவராக, அமைச்சின் மேலதிக செயலாளர் பரமலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதி' மீனவர்களுக்கான வலை, படகு மற்றும் உபகரணங்களை தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டுவந்த நோர்த் சீ நிறுவனம், முதலீட்டுச் சபைக் கட்டடத்தில் இருந்து, பம்பலப்பிட்டி பனை அபிவிருத்திச் சபைக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில்...

கைதான புலிகளும், அவர்கள் பயணம் செய்த வாகனத்துடன் காத்தான்குடி பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். இவர்கள், இன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் முன்னிறுத்தப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

## கண்காணிப்பு...

தலைவர் ரெலவ்சனுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுக்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் ஆரம்பமாகி, சுமார் இரண்டு மணிநேரம் இடம பெற்றன. (01)

## மாணவர் பேரவை...

சாவியினைப் பலவந்தமாக கைப்பற்றிக்கொண்டு, விசாரனைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தினுள்ளே கொண்டுசெல்ல முயற்சித்தனர். இதற்கு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர்.

அவர்களை - நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விசாரித்தபின்பே விடுவிக்கமுடியும் எனப் பொலிஸார் கூறினர். அதற்குள் பல்கலைக்கழக மாணவர்களும் மக்களும் அங்கு கூடவே, பலத்த வாக்குவாதங்களுக்குப் பின்னர் வாகனத்தின் சாவியினை புலனாய்வுப் பிரிவினர் திருப்பிக் கொடுத்து மாணவர்களை விடுவித்தனர்.

'பொங்கு தமிழ்' செயற்பாடுகளில் மாணவர்கள் தீவிரமாக செயற்பட்டது குறித்தும், அவர்களை புலனாயவு பிரிவினர் அங்குவைத்து மிரட்டியதும் குறிப்பிடத்தக்கது.

## முகமாலை, நாகர்கோவில்...

இப்பேச்சுக்களைத் தொடர்ந்து- மாலை 3 மணியளவில் கிளாலி, முகமாலை, நாகர்கோவில் ஆகிய முன்னரங்கப் பகுதிகளுக்கு கண்காணிப்புக் குழுத்தலைவர், ஜெனரல் ரெலவ்சனை, கேணல் தீபன் நேரடியாக அழைத்துச் சென்றார்.

இவர்களுடன் - வட போர்முனைக் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் அறிவு, லெப். கேணல் முகுந்தன் ஆகியோரும் சென்றிருந்தனர். இவர்கள் யுத்த சூனியப் பகுதிகளில், படையினரால் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காவல் அரணகளையும் முகாம்களையும் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் காண்பித்தனர்.

நாகர்கோவில் பகுதியிலுள்ள சூனியப் பிரதேசத்தில், புலிகளின் காவலரணிலிருந்து 40 மீற்றர் இடைவெளியில், புதிய படைமுகாம் அமைக்கப்பட்டிருந்ததை கேணல் தீபன் அப்போது கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நேரில் காண்பித்தார்.

இந்த விடயம் குறித்து ஏற்கனவே கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தளபதி கேணல் தீபன் சுட்டிக்காட்டினார்.

## மாவீரர்களுக்கு...

நிகழ்வு குருநகரில் மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது.

மற்றுமொரு அஞ்சலி நிகழ்வு நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

## இடைக்கால்...

புலிகளின் கருத்தைப் பெற்றுகொள்ளும்வரை, யாருக்கும் இத்திட்டம் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுத்துள்ள அவசர வேண்டுகோளில், வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அலகு குறித்த இறுதிப் பிரதியை, நாடாளுமன்றத்தில் உடனே விவாதத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.